REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2024 ஜனவரி 13 சனிக்கிழமை

வரு. 92 இல. 12 | Saturday 13, January, 2024 | 10பக்கங்கள்

## வசந்தம், தெரண TVயில் இன்று ஜனாதிபதியின் வடக்கு விஜயம்

### ஆவணப்படம் ஒளிபரப்பு

ஜனாதிபதியின் வடக்குக்கான சுற்றுப்பயணம் தொடர்பான விசேட ஆவணப்படம் இன்று 13ஆம் திகதி ITN/ வசந்தம் தொலைக்காட்சியில் இரவு 7.10 மணிக்கும், Derana தொலைக்காட்சியில் பிற்பகல் 3.30 மணிக்கும் ஒளிபரப்பப்படவுள்ளது. வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட 06

# பொருளாதாரத்தில் இலங்கை சிறப்பான முன்னேற்றம்

### ஜப்பான் நிதி அமைச்சர் சுசூகி ஷூனிச்சி பாராட்டு

**ஜனாதிபதியின் சரியான பொருளாதார வேலைத்திட்டமே முன்னேற்றத்துக்கு வழிவகுத்தது**



இலங்கை பொருளாதார ரீதியில் அடைந்துள்ள சிறந்த முன்னேற்றங்களுக்கு ஜப்பான் நிதி அமைச்சர் சுசூகி ஷூனிச்சி (H.E. SUZUKI Shunichi) பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் பணவீக்க குறிகாட்டிகளில் காணக்கூடிய முன்னேற்றங்களை சுட்டிக்காட்டிய ஜப்பான் நிதியமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான பொருளாதார வேலைத் திட்டத்தின் பலனாகவே அந்த முன்னேற்றங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார். ஜப்பான் நிதியமைச்சர் SUZUKI Shunichi, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் (11) ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பான் இலங்கை பொருளாதார உறவுகளை பலப்படுத்திக்கொள்ளும் நோக்கிலேயே ஜப்பான் 06

**ஜப்பான் நிதி உதவியில் ஆரம்பிக்கப்பட்டு, இடைநடுவில் கைவிடப்பட்ட வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் கவனம்**

### ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான

# தங்கம் மற்றும் வெளிநாட்டு கரண்சிகள் கொள்ளை

### கொழும்பு செட்டியார் தெருவில் அதிகாலை சம்பவம்

**சீ.ஐ.டி எனக் கூறி முச்சக்கரவண்டியில் கடை ஊழியரை கடத்திய கொள்ளையர்கள்**

கொழும்பு செட்டியார் தெருவில் சுமார் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் வெளிநாட்டு கரண்சிகள் அடங்கிய பொதியை எடுத்துச் சென்ற நபரொருவரை முச்சக்கரவண்டியில் வந்த சிலர் கடத்திச் சென்று அந்த நபரிடமிருந்த பொதியை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ள சம்பவமொன்று நேற்று புறக்கோட்டை பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

அந்த நபர் வைத்திருந்த பொதியில் 21 மற்றும் 22 கரட் 432 கிராம் தங்கம், 24 கரட் 92 கிராம் தங்கம் மற்றும் 19 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு கரன்சிகள் இருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகைக் 06



**03** பெருந்தோட்டப் பகுதிகள் உட்பட **அனைத்து பாலர் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் காலை உணவு**

### மலையக பெருந்தோட்டப் பகுதிகளில்

## ஏற்றுமதிப்பயிர் உற்பத்தியை ஊக்குவிக்க காணிகளை குத்தகைக்கு விட தீர்மானம்

### விசேட அமைச்சரவைப் பத்திரம் விரைவில்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையக பெருந்தோட்டப் பகுதியில் ஏற்றுமதிப் பயிர்கள் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் காணிகள் குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அது தொடர்பில் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை அடுத்த வாரம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அது தொடர்பாக வசதிகளை பெற்றுக்கொடுக்கும் புதிய சட்டமொன்றை கொண்டு 06

## பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு ஜனாதிபதி ரணிலே பிரதான காரணி

### உலக தலைவர்களுடனான சந்திப்புகளின் பிரதிபலனே அது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உலக நாடுகளின் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதன் பயனாகவே நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். உல்லாசப் பயணங்களுக்காக ஜனாதிபதி வெளிநாடு செல்லவில்லை என்பதை சபையில் வலியுறுத்திய அவர், அது தொடர்பில் 06

### 2024ஆம் ஆண்டு

## நன்னீர் மீன்பிடித்துறைக்கான அபிவிருத்தி திட்டங்களை விரைவில் பூர்த்தியாக்கவும்

### நக்டாவுக்கு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு



2024ஆம் ஆண்டில் நன்னீர் மீன்பிடித்துறையை கட்டியெழுப்புவதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனைகளை முன்வைத்துள்ளார். இதன் பிரகாரம் கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர்வேளாண்மை 06

## சமிந்த விஜேசிறி MPயின் இடத்துக்கு நயன வாசலதிலக பதவிப்பிரமாணம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக நயன வாசலதிலக நேற்று (12) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.


இதன் பின்னர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்திய 06

### வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக

## 05 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உள்ள பெண்கள் செல்லத் தடை

### புதிய சட்டம் விரைவில் நடைமுறை



ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுள்ள பெண்கள் வெளிநாட்டில் வேலை செய்வதற்கு செல்வதை தடை செய்யும் முகமாக புதிய சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரவுள்ளதாக, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக 06

## நாட்டின் பொருளாதார நிலைமையை சீராக்கும் திறன் ஜனாதிபதிக்கே உண்டு

### அவரே ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடுவார்



இதுவரை எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவும் தேர்தலை குறிவைக்காமல் மக்களின் நன்மைக்காவும் எதிர்கால பொருளாதார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாரென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் விதம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமெனத் தெரிவித்த அமைச்சர், இந்நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்செய்யும் திறன் தற்போதைய 06




### தைப்பொங்கல் தினத்தன்று

## தமிழ்க் கைதிகளை உறவினர்கள் இனிப்புகளுடன் பார்வையிட அனுமதி

தைப்பொங்கல் தினத்தன்று இந்துமத தமிழ்க் கைதிகளை பார்வையாளர்கள் சந்திக்கும் வாய்ப்பை வழங்க சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய இந்துமத தமிழ்க் கைதிகளை பார்க்க அவர்களது உறவினர்கள் வரும் போது, ஒருவருக்கு மட்டும் போதுமான உணவுப் பொட்டலங்கள் மற்றும் இனிப்புகளை கொண்டு வருமாறு சிறைச்சாலை ஆணையாளர் (புலனாய்வு மற்றும் 06

## பாடசாலைகளில் ஒழுக்கத்தை பாதுகாக்க புதிய சுற்றுநிருபம்

### அமைச்சர் சுசில் தெரிவிப்பு



நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் ஒழுக்கத்தை பாதுகாக்கும் வகையில் வகுப்புகளை நடத்துவது தொடர்பான சுற்றுநிருபத்தை மீண்டும் எதிர்வரும் காலப்பகுதியில் வெளியிடவுள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (11) அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பித்தவுடன் சுற்றுநிருபத்தை உடனடியாக வெளியிட எதிர்பார்த்துள்ளதாகத் 06

## தைப்பொங்கல் தினத்தன்று மதுபானசாலைகளுக்கு பூட்டு

### இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் நடவடிக்கை




தைப்பொங்கல் தினமான 15ஆம் திகதி நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் மதுபான சாலைகளை மூடுவதற்கு மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

தைப்பொங்கல் தினமானது தமிழர் நன்றி பகரும் நன்நாளென்பதுடன், அன்றையநாள் 06

## 2024 இல் 20 இலட்சம் சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்கு திட்டம்

### சுற்றுலாத்துறை மூலம் 06 பில். டொலர் வருவாய் எதிர்பார்ப்பு



சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ள நிலையில் இந்த ஆண்டு சுமார் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இதன் மூலம் 06 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுவதாகவும் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 106% 06

## ஐ.தே.க.வின் மாவட்ட மட்ட மாநாடுகள் இன்று காலியில்

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட மட்ட விசேட மாநாடுகள் எதிர்வரும் சில தினங்களில் நடைபெறவுள்ளன. கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விசேட மாநாடுகளில் முதலாவது மாநாடு இன்று (13) காலை காலி நகர மண்டபத்தில் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன 06

### அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம்

## 18 பிரதேச செயலகப் பிரிவுகளில் 30,195 குடும்பங்களை சேர்ந்த 97,978 பேர் பாதிப்பு

**அட்டாளைச்சேனை, திருக்கோவில் தினகரன், நற்பிட்டிமுனை தினகரன், நிருபர்கள்**





அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# தமிழக அயலகத் தமிழர் விழா 2024 – சென்னை












படங்கள் : சாஹுல் ஹமீத்












தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2024 ஜனவரி 13 சனிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 05.05
லுஹர் - 12.20
அஸர் - 03.41
மஃரிப் - 06.11
இஷா - 07.26

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மார்கழி 28
ராகுகாலம் : காலை : 11.30 - 12.33வரை
சுபநேரம் : பகல் : 6.33 - 8.03வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



அரசாங்க சேவை நாட்டின் முதுகெலும்பு

# நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் பொறுப்பு கிராம அலுவலர்களுக்கு உண்டு

## பிரதமர் தினேஷ் குணவர்தன

"அரசாங்க சேவை என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் பொறுப்பில் நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்" என, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று (12) நடைபெற்ற நிர்வாக கிராம உத்தியோகத்தர் நியமனம் வழங்கும் நிகழ்விலேயே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர்,

"கிராம உத்தியோகத்தர்களுக்கு உள்ள பொறுப்புகளை பெரும்பாலான அரசாங்க உத்தியோகத்தர்கள் மறந்து விடுகின்றனர்.

அரசாங்க அதிகாரிகள் மட்டுமல்ல, அரசியல்வாதிகளும் மறந்து விடுகிறார்கள். எமது நாடு, வரலாறு, வளர்ச்சியடைந்தது போலவே, நாடு பாதுகாக்கப்பட்டதும் கிராமத்திலிருந்து ஆரம்பித்த கிராமிய ஆட்சி முறைமையினாலாகும்.

அப்போது எங்களிடம் விமானப்படை இருக்கவில்லை என்ற போதும், எமது நான்கு எல்லைகளையும் பாதுகாக்கக்கூடிய பாதுகாப்பு அமைப்புகளை எமது மன்னர்கள் உருவாக்கினர். அதற்கெல்லாம் பலமாக இருந்தவர்கள் எமது கிராமியத் தலைவர்கள்.

அந்தத் தலைவர்கள் தான் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க பலமாக இருந்தனர். அத்தகைய தலைமையால் கட்டியெழுப்பப்பட்ட நாடு தன்னிறைவை நோக்கி நகர்ந்து உணவு மற்றும் கலாசாரத்தில் இன்றும் உலகையே ஆச்சரியப்படுத்தும் நிலையை உருவாக்கியது.

அப்போது கிராம சேவை அலுவலகத்தில் வசதிகள் மிகவும் குறைவு. முன்பு டிஜிட்டல் தொழில்நுட்பம் இல்லை. முழு கிராம சேவையையும் முறையாக மாற்றும் திறன் கொண்ட தகவல் தொழில்நுட்பத்தை உங்களுக்கு வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அது பற்றிய தீர்மானங்கள் எட்டப்பட்டதும்,



மேலும் சேவைகளை வழங்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் மற்றும் உயர்தரமான அரசாங்க நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயலுமை அதிகரிக்கும்.

பொதுச் சேவை என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் பொறுப்பில் நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்" எனத் தெரிவித்தார்.



இலங்கை போக்குவரத்துச் சபைக்கு புதிதாக சாரதி மற்றும் நடத்துனர்களை நியமிப்பதற்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பில் உள்ள அமைச்சில் நடைபெற்றபோது போக்குவரத்து நெடுஞ்சாலைகள், வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன புதிதாக நியமிக்கப்பட்ட ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் 'உலக ஹிந்தி தினம்'

## பிரதம அதிதியாக அமைச்சர் சுசில்

இந்திய உயர்ஸ்தானிகராலய கலாசாரப் பிரிவின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் 'உலக ஹிந்தி தினம்' கொழும்பில் கடந்த புதன் (10) மற்றும் வியாழன் (11) ஆகிய இரு தினங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டன.

களனி, ஸ்ரீஜயவர்தனபுர, ரஜரட்டை, இலங்கை கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகள் ஆகிய பல் கலைக்கழகங்கள் மற்றும் இந்தியாவின் கர்மாதேவி ஞாபகார்த்த பி ஜி கல்லூரியுடன் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியிலும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்திலும் ஹிந்தி தின நிகழ்வுகள் நடைபெற்றன. இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கடந்த புதன்கிழமை நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரதி உயர்ஸ்தானிகர் சத்யாஞ்சல் பாண்டேயும் விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமாரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உயர்ஸ்தானிகர் ஸ்ரீசந்தோஷ் ஜா உரையாற்றிய போது, ஹிந்திமொழியானது சர்வதேச மொழியாக வளர்ச்சி அடைந்துவரும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய ரீதியில் சுமார் 600 மில்லியன் பேர் ஹிந்திமொழியில் உரையாற்றுபவர்களாக உள்ளதுடன், உலகில் அதிகளவில் உரையாடப்படும் மொழிகளில் ஹிந்திமொழி மூன்றாம் இடத்திலுள்ளது.

முதல் நாள் நிகழ்வின் போது, மூன்று அமர்வுகளில் எழுத்துமூலமான சமர்ப்பணங்களை 25 ஹிந்தி புலமையாளர்கள் முன்வைத்ததுடன், 200க்கும் மேற்பட்ட புலமையாளர்கள் மற்றும் மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். இரண்டாம் நாள் நிகழ்வின் போது, சுமார் 20 ஆய்வுகளை ஹிந்தி மாணவர்கள் சமர்ப்பித்தனர்.

இதன்போது, இந்திய அரசாங்கத்தின் ஹிந்தி மத்திய நிறுவனம் ஏற்பாடு செய்த ஹிந்தி தேர்வுகளுக்கான தகுதிச் சான்றிதழ்கள் இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

1949 இல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையில் ஹிந்தி மொழி பேசப்பட்டதை குறிக்கும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஜனவரி 10 ஆம் திகதி உலக ஹிந்தி தினம் கடைப்பிடிக்கப்படுவதுடன், 1975ஆம் ஆண்டில் இந்நாளிலேயே முதலாவது உலக ஹிந்தி மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டது.

இலங்கையில் 88 பாடசாலைகளிலும் 7 பொதுப் பல்கலைக்கழகங்களிலும் ஹிந்திமொழி, வெளிநாட்டு மொழியாக கற்பிக்கப்படுகின்றது.

பெருந்தோட்டப் பகுதிகள் உட்பட

# அனைத்து பாலர் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் காலை உணவு

## இவ்வருடம் முதல் அமுல்படுத்த திட்டம்: இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க

பெருந்தோட்டப் பகுதிகள் உட்பட நாட்டிலுள்ள அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் இவ்வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படுமென மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்ட பாலர் பாடசாலைகளிலிருக்கும் 35,000 மாணவர்கள் உள்ளடங்களாக 1,55,000 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "நாட்டின் 1,20,000 பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவை வழங்குவது சவாலாக அமைந்திருந்தது. அந்த வகையில் தற்போது மாணவர் ஒருவருக்காக ஒதுக்கப்படும் தொகையை 60 ரூபா முதல் 100 ரூபா வரையில் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்" என்று தெரிவித்தார்.



இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போசாக்கு குறைப்பாட்டிற்கு ஆளாகியுள்ள நிலையில் புரோட்டின் நிறைந்த போசாக்கான உணவை வழங்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கமையவே நாட்டிலுள்ள அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் திட்டத்தை செயற்படுத்தவிருப்பதாகவும், தோட்ட பாடசாலைகள் தவிர்ந்த பாலர் பாடசாலைகளில் மட்டும் 1,20,000 மாணவர்கள் இருப்பதாகவும் அதேபோல் கர்ப்பிணித் தாய்மாருக்கான போசாக்குப் பொதிகளை வழங்க எதிர்பார்த்திருப்பதாகவும், அதற்காக 2,20,214 கர்ப்பிணித் தாய்மாருக்கு 4,500 பெறுமதியான போசாக்கு பொதிகளை 10 மாதங்களுக்கு வழங்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பாலர் பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பாலர் பருவகால மேம்பாடு தொடர்பிலான தேசிய செயலாளர் அலுவலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் 18,333 பாலர் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளன. அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். பாலர் பாடசாலைகளை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 2,500 ரூபாவை வழங்கவும், அது போதுமான தொகை இல்லை என்பதால் அதனை மேலும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# வாள்வெட்டில் இளைஞன் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இளைஞர் ஒருவரை கட்டி வைத்து வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் அந்த இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ். வடமராட்சியைச் சேர்ந்த மேற்படி இளைஞர், எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் திருமணம் முடித்து வசித்து வந்த நிலையில் இனந்தெரியாதோரால் இவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இவரது கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இளைஞரை மீட்ட உறவினர்கள், அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

# வீரகேசரி பிரதம ஆசிரியரின் மாமியார் காலமானார்



வீரகேசரி நாளிதழ் மற்றும் வீரகேசரி வார இதழ் ஆகியவற்றின் பிரதம ஆசிரியரான எஸ். ஸ்ரீகஜனின் மாமியாரும் முன்னாள் சக்தி தொலைக்காட்சி ஊடகவியலாளர் சூரியபிரபாவின் தாயாருமான திருமதி சூரியமூர்த்தி அம்மையார் நேற்று சென்னையில் காலமானார்.

சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த இவர் சென்னையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது பூதவுடல் இன்றைய தினம் இலங்கைக்கு எடுத்து வரப்பட உள்ளது. இறுதிக் கிரியைகள் மற்றும் ஈமச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் கொழும்பு எம்.ஏ.ரஹீமா



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சி தொடரில் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு வழங்கி பெருமிதம் தேடிக் கொண்டோர் வரிசையில், எதிர்வரும் செவ்வாய் (16) இரவு 8.15 மணி நிகழ்ச்சியில் பிரபல சிறுகதை பெண் எழுத்தாளர் கொழும்பு எம்.ஏ.ரஹீமா அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். 1980ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரையான காலகட்டத்தில் இளையோர் நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்றதுடன், 'மாதர் மஜ்லிஸ்' நிகழ்ச்சிக்கு தொடராக பிரதியாக்கம் செய்துள்ளார். சிறுகதைகளை அவர் எழுதியதுடன், விசேட நாட்களில் ஒலிபரப்பான கவியரங்குகளுக்கு கவிதைகள் எழுதி குரலும் கொடுத்துள்ளார்.

சமகால நிகழ்வுகளை, சமூகத்தில் நிறைந்திருக்கும் குறைகளை மையப்படுத்தி எழுதுவதில் மெச்சத்தக்க தைரியம் கொண்ட பெண் எழுத்தாளராக இலக்கியப் பரப்பில் புகழ் தேடிய ஒருவராவார். அண்மையில் அவர் வெளியிட்ட 'சூல்சோறு' சிறுகதைத்தொகுதி அவரது எழுத்து திறமைக்குச் சான்றாகிறது.

வாழைத்தோட்டம் மிஹிந்து மாவத்தை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கல்வி கற்று, உயர் கல்வியை திஹாரிய தாருஸ்ஸலாம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அவர் தொடர்ந்திருந்தார். குருநாகல் தெலும்புகல்ல முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற அவர், கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் 22 வருடங்கள் பணியாற்றி, 2008ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

சந்நிதியான் ஆசிரமத்தால்

# வவுனியா, முல்லைத்தீவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆசிரமத்தால் முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 123 குடும்பங்களுக்கான ரூபா 615,000 பெறுமதியான உலர் உணவு பொதிகள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதில் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட மாமூலை கிராம சேவையாளர் பிரிவில் 52 குடும்பங்களுக்கும், வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோவில்புளியங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 35 குடும்பங்களுக்கும், கணேசபுரம் கிராம சேவையாளர் பிரிவில் 36 குடும்பங்களுக்குமே உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த உலர் உணவு நிவாரணத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்கள், சமூக செயற்பாட்டாளர் இ.தயாபரன், கோவில் புளியங்குளம் கிராம சேவகர் சர்வேந்திரன், முன்னாள் வெங்கல செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளர் வெங்கள செட்டிகுளம் சு.ஜெகதீஸ்வரன், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர் ம.சுஜேந்திரன் ஆகியோர் சென்று வழங்கி வைத்தனர்.



# வீடு பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்த நபர் கைது

## பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை



கொழும்பு, பேலியகொடை வணிக வளாகம் மற்றும் கொம்பனித்தெரு பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

யாகின்ன, கஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். பல்வேறு நபர்களிடம் 19,663,800 ரூபாவை இச்சந்தேக நபர் மோசடி செய்தமை தொடர்பாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பல முறைப்பாடுகள் கிடைத்ததை தொடர்ந்து விசாரணை நடத்தி இச்சந்தேக நபரைக் கைது செய்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர். ஆகவே, இந்த விடயம் தொடர்பாக பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 29ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஜுமாதல் ஆகிறா பிறை 29

### குறள் தரும் சிந்தனை



அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது

தாங்கள் விரும்புவது கிடைக்கும் என்ற நிலையேற்படும் போது கீழ்மக்கள், தங்களை ஒழுக்கமுடையவர்கள் போலக் காட்டிக் கொள்வார்கள். மற்ற சமயங்களில் அவர்கள் பயத்தின் காரணமாக மட்டுமே ஓரளவு ஒழுக்கமுள்ளவர்களாக நடந்து கொள்வார்கள்.

# யதார்த்தத்தை புரிந்து கொள்வது அவசியம்!

இலங்கைவாழ் மக்கள் மத்தியில் கடந்த சில வருடங்களாக பேசுபொருளாக இருந்து வருகின்ற விடயம் பொருளாதார நெருக்கடி ஆகும். இலங்கையில் உருவெடுத்த பொருளாதார நெருக்கடியானது வறிய மக்கள் தொடக்கம் செல்வந்தர்கள் வரை ஒவ்வொருவரையும் வெகுவாகப் பாதித்துள்ளதனாலேயே அனைத்து மக்களும் அதுபற்றி அதிகம் பேசுகின்றனர்.

நம் குடும்பத்தின் தலைவரான தந்தை பலரிடமும் வகைதொகையின்றி கடன் வாங்கி விட்டாரென்று வைத்துக் கொள்வோம். நம் குடும்பத்தில் அவரது வகிபாகம் இல்லாமல் போனாலும் கூட, அவர் வாங்கிய கடனால் உண்டான தொந்தரவு எம்மை விட்டு நீங்கிப் போவதில்லை. அக்கடனை நாம் எவ்வாறாயினும் மீளச் செலுத்தியே ஆக வேண்டும். அவ்வாறு மீளச்செலுத்துவதற்காக நாம் பாடுபடுகின்ற போது, நம் குடும்பமே பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியையும் இந்தக் கதையுடனேயே ஒப்பிட வேண்டியுள்ளது. அதாவது முன்னைய ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த தவறான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகவே நாட்டில் முன்னொருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடி தோன்றியது. அதன் பாதிப்புகளையே நாட்டு மக்கள் இப்போது எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இன்றைய நிலைமையில் நாட்டு மக்கள் அனைவரும் ஒரு யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம். எமது நாடு இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது என்பது உலகுக்கே தெரிந்த விடயம் ஆகும். இந்த நெருக்கடிக்குக் காரணமானவர்கள் யாரென்பதை ஆராய்ந்து கொண்டிருப்பதிலேயோ அல்லது அவர்களை தொடர்ந்தும் கண்டித்துக் கொண்டிருப்பதிலேயோ காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தால் ஆகப் போவது எதுவுமில்லை. அதனால் விளைவது பாதகமே ஆகும்.

அன்றைய ஆட்சியாளர்களால் பொருளாதாரக் கொள்ளை சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இன்று இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்கப் போவதில்லை. அன்று அவர்கள் கடைப்பிடித்த கொள்கையின் விளைவை இன்று மக்கள் அனுபவிப்பது ஒருபுறமிருக்க, அக்காலத்தில் சர்வதேசத்திடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களையும் இன்றைய ஆட்சியிலேயே மீளச்செலுத்த வேண்டியிருக்கின்றது.

அதலபாதாளத்தில் மூழ்கிய நாட்டை மீண்டும் முன்னைய நிலைமைக்குக் கொண்டு வருவதென்பது இலகுவான காரியமல்ல. வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்துவதுதான் இங்குள்ள பெரும் சவால் ஆகும். உள்நாட்டில் பொருளாதார நிலைமையை சீராக வைத்துக் கொள்வது ஒருபுறமிருக்க, வெளிநாட்டுக் கடன்களையும் மீளச்செலுத்தி ஆகவேண்டும்.

எமது நாடு இருண்ட யுகத்துக்குள் மூழ்கியிருந்த வேளையில், நாட்டின் அரசுத்தலைவரும் அரசாங்கமும் ஆட்சியிலிருந்து அகன்ற வேளையில், நாட்டின் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு எவரும் முன்வரவில்லை. மூழ்கிக் கொண்டிருக்கின்ற கப்பலுக்குள் ஏறிக் கொள்வது பயனற்றது என்றுதான் அரசியல்வாதிகள் பலரும் எண்ணினர்.

அதேசமயம் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான ஆற்றலும் ஆளுமையும் அரசியல்வாதிகள் பலரிடம் இருக்கவில்லை. அவ்வாறான நெருக்கடி வேளையில் நாட்டின் தலைமையை துணிச்சலுடன் பொறுப்பேற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

நாட்டைப் பொறுப்பேற்ற குறுகிய காலப்பகுதிக்குள் 'வங்குரோத்து அற்ற நாடு' என்ற நிலைமைக்கு இலங்கையைக் கொண்டுவருவதற்கு அவரால் முடிந்துள்ளது. இலங்கையினால் இனிமேல் தலைநிமிர முடியுமென்ற நம்பிக்கையை சர்வதேசத்திடம் ஏற்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

நாடு மீண்டெழுகின்ற வேளையில் மக்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை படிப்படியாக மீளச்செலுத்த வேண்டும். அதேசமயம் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்களிடமிருந்து புதிய கடன்களைப் பெறவும் வேண்டியுள்ளது. இவ்வாறான நெருக்கடி காலப்பகுதியில் வரிகள் போன்ற சுமைகளை நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தாங்கிக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

'கடனில் மூழ்கிய நாடு' என்ற அவப்பெயரில் இருந்து நாடு மீள்வதாயின் இதனை விட வேறு மார்க்கமே கிடையாது. 'அவர் வந்தால் நாடு மீண்டு விடும், இவர் வந்தால் நாடு மீண்டுவிடும்' என்றெல்லாம் அபத்தமான பேச்சுகளும் நம்பிக்கைகளும் அர்த்தமற்றவையாகும்.

அரசியலில் ஆற்றல் மிக்கவர்கள் யார்? துணிச்சல் மிக்கவர்கள் யார்? சவாலைக் கண்டு துணிச்சலுடன் எதிர்கொள்பவர்கள் யார்? நெருக்கடிகளைக் கண்டு அஞ்சி ஓடுபவர்கள் யார்?

இவை எல்லாவற்றையும் கடந்த நெருக்கடிக் காலத்தில் நாட்டு மக்கள் நன்றாகவே புரிந்து கொண்டு விட்டனர்.

அரசியல் ஆதாயத்துக்காக அரசியல்வாதிகள் பலர் நிறைவேறாத நம்பிக்கைகளை மக்கள் மத்தியில் திணிப்பதற்கு முற்படுவர். ஆனால் அனைத்தையும் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியவர்கள் மக்களாவர்.

editor.tkn@lakehouse.lk

# ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் மரபுத்திங்கள் விழா

**ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஸ்காபரோ, கனடியத் தமிழர் பேரவை மற்றும் தமிழ் இருக்கை நிறுவனம் இணைந்து நடத்திய பெருநிகழ்வு**

ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஸ்காபரோ, கனடியத் தமிழர் பேரவை மற்றும் தமிழ் இருக்கை நிறுவனம் இணைந்து 2024 ஜனவரி 10 அன்று தமிழ் மரபுத்திங்கள் விழாவை நடத்தின. இந்த நிகழ்வு ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்கார்பரோ ஹைலேண்ட் மண்டபத்தில் நடைபெற்றது. மங்கள விளக்கேற்றப்பட்டு விழா ஆரம்பமானதுடன், செழுமையும் பன்முகத்தன்மையும் கொண்ட தமிழ் கலாசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் பலவும் இதன் போது இடம்பெற்றன. பொங்கல் உட்பட தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளும் இந்த நிகழ்வில் பரிமாறப்பட்டன.











இந்த நிகழ்வில் தமிழ் கலாசாரத்தை ஆராய்வதற்கும் பாதுகாப்பதற்கும் தனது அர்ப்பணிப்பிற்காக அறியப்படும் புகழ்பெற்ற கனடா மானுடவியலாளரான டொக்டர் பிரெண்டா பெக் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சங்க இலக்கியத்தில் 'வெள்ளைக் குடை'யின் முக்கியத்துவத்தையும், அது ஒற்றுமையின் அடையாளமாக ஆதி தமிழர் மரபில் பார்க்கப்பட்டது தொடர்பாகவும் உரையாற்றிய அவர், தனது கருத்தை விளக்குவதற்கு முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு வெள்ளைக் குடையை வந்திருந்தவர்களுக்கு காட்சிப்படுத்தியதோடு, இந்த தனித்துவமான கலாசார கலைப்பொருளைக் குறிப்பிடும் சங்க இலக்கியப்பாடலையும் படித்துக்காட்டினார்.

இவர் மட்டும் அல்லாது ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கை திட்டத்தின் தலைவரும் கனடியத் தமிழர் பேரவையின் முன்னாள் தலைவருமான சிவன் இளங்கோ, கனடியத் தமிழர் பேரவையின் தற்போதைய தலைவி திருமதி ரவீனா ராஜசிங்கம், பேராசிரியர் லிண்டா ஜோன்சன் (ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலைக்கழகத்தின் தற்காலிக அதிபர்) மற்றும் செலஸ்டே. ரிச்சர்ட்ஸ் (இயக்குநர் மேம்பாடு மற்றும் பழைய மாணவர் உறவுகள்) ஆகியோரும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர்.



பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு அவர்களால் நேரில் வர முடியாவிட்டாலும், அவர் தனது உரையை மெய்நிகராக வழங்கினார். தமிழ் இருக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆர்வத்தை அவர் வெளிப்படுத்தியபோது அவரது வார்த்தைகள் பார்வையாளர்களை கவர்ந்தன.

ரொறன்ரோ ஸ்காபரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆய்வுகளுக்கான இருக்கையை நிறுவுதல் என்பது உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான நன்கொடையாளர்களின் ஆதரவுடன் கனடியத் தமிழர் பேரவை மற்றும் தமிழ் இருக்கை நிறுவனம் ஆகியவற்றின் வரலாற்று கூட்டு சாதனையாகும். இந்த குறிப்பிடத்தக்க சாதனை தமிழ்மொழியின் கல்வி வளர்ச்சிக்கும் ஆய்வுக்கும் மேலும் உதவும். 2024 ஆம் ஆண்டு மே 1 ஆம் தேதி தமிழ் ஆய்வுத் துறையின் தலைவர் பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரொறன்ரோ ஸ்கார்பரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் பாரம்பரியம் மற்றும்



கலாச்சாரத்தை கொண்டாடும் இந்த நிகழ்வு சுமார் 200 விருந்தினர்கள் மற்றும் கலைஞர்களுடன் சிறப்பாக நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. டொராண்டோ பல்கலைக்கழக தமிழ் இருக்கை சந்தேகத்திற்கு இடமின்றி வரும் ஆண்டுகளில் பல சாதனைகளை நிகழ்த்தும் என உலகளாவிய தமிழ் சமூகம் எதிர்நோக்குகிறது. இம்முயற்சியானது பல்வேறு சமூகத்தினரிடையே தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கிய அறிவையும் புரிதலையும் வளர்ப்பதற்கும், அதில் சிறந்து விளங்குவதற்கும் ஒரு கலங்கரை விளக்கமாக அமையும்.



# ஒருபுறம் பாம்புகளின் நடமாட்டம், மறுபுறம் முதலைகளினால் அச்சம்!

**சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி குடியேற்ற திட்ட கிராம மக்கள் திண்டாட்டம்!**

அடைமழையினாலும், இங்கினியாகல டீ.எஸ்.சேனநாயக சமுத்திர வான்கதவு திறப்பினாலும் சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி குடியேற்ற திட்ட கிராம மக்கள் சிறு குழந்தைகளோடும், வயோதிபர்களோடும், வலது குறைந்தோருடனும் அவதியுறுகின்றனர்.

கிராமத்தின் பின்புறமாகவும், கரைவாகு ஆற்றினால் முன்புறமாகவும் பரவும் வெள்ளநீர் முழுக்கிராமத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

கிராமத்தை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்ல முடியாத நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ள இம்மக்கள், 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய சுனாமி அனர்த்தத்தினால் உயிர்கள், உடைமைகள் ,குடியிருப்பு மற்றும் தொழில்களை இழந்து வெறும் கையோடு இக்குடியேற்றக் கிராமத்தில் குடியேறிய மக்களாவர்.

மீன்பிடி, விவசாயம் என்பவற்றோடு நாளாந்தம் கூலித்தொழில் செய்து தமது குடும்ப வருமானத்தை பெற்றுக் கொள்ளும் இம்மக்கள் இவ்வெள்ள நிலைமையில் தொழிலின்றி இக்கட்டான நிலமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் பூமராங் காலாண்டு மின்னிதழ் வெளியீடு

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் பூமராங் மின்னிதழின் வெளியீடு, நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மெல்பன் நேரம் இரவு 700 மணிக்கு மெய்நிகரில் நடைபெறவிருக்கின்றது.

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்களை இந்நிகழ்வில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் செயலாளர் லெ. முருகபூபதி, தலைவர் கிறிஸ்டி நல்லரெத்தினம் ஆகியோர் இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

மின்னஞ்சல்: atlas25012016@gmail.com

மெய்நிகர் இணைப்பு :
Time: Jan 14, 2024 07:00 PM Canberra, Melbourne, Sydney
Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/82603645021?pwd=Mkp3cFRpOGFMdmJCUHkzZVF0TVFjZz09
Meeting ID: 826 0364 5021
Passcode: 383598
அவுஸ்திரேலியா: இரவு 700 மணி
இலங்கை – இந்தியா: பிற்பகல் 1.30 மணி
நியூசிலாந்து: இரவு 9.00 மணி
இங்கிலாந்து: காலை 8.00 மணி
ஜெர்மனி – பிரான்ஸ்: காலை 9.00 மணி




# ஒரு போர்க்குரல் தமிழ்ச்செல்வனின் எழுத்துகள்

"ஊடகம், அரசியல், சூழலியல், சமூகச் செயற்பாடு, கலை, இலக்கியம், பண்பாடு, தனி வாழ்க்கை எல்லாம் ஒரு வட்டமாக இணைந்தவை. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதவை. அப்படிப் பிரித்தால் அதனால் அனைத்திலும் பாதிப்பு ஏற்படும். முக்கியமாக சூழலியலை மிக விரிந்த – ஆழமான நோக்கில் பார்க்கிறார் ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன். அரசியற் சூழல், ஊடகச் சூழல், பண்பாட்டுச் சூழல், சமூகச் சூழல் என அனைத்துத் தளங்களும் சீராக இருக்க வேண்டும். அல்லது அவை சீராக்கப்பட வேண்டும்" என்ற நிலைப்பாட்டோடு இயங்கிக் கொண்டிருப்பவர் தமிழ்ச்செல்வன்.

இத்தகைய நிலைப்பாட்டோடு இன்றைய ஈழத்தமிழ்ச் சூழலில் ஒருவர் இயங்குவதென்பது மிகச் சவாலானது.

மக்கள் விரோத, சமூக விரோத, தேச விரோத, உலக விரோதச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் சக்திகளுக்கு எதிராகத் தமிழ்ச்செல்வனைப் போன்ற நிலைப்பாட்டை எடுத்து இயங்குவது மிகக் கடினம். வலுவான அமைப்பின் பலமின்றித் தனித்து இயங்குவதானால் அதற்கு மிகுந்த தன்னம்பிக்கையும் உறுதியும் வேண்டும். இல்லையென்றால் தாக்குப்பிடிக்கவே முடியாது.


சில அங்கீகாரங்களும் விருதுகளும் (வட மாகாணத்தின் சிறந்த புகைப்படத்துக்கான இளங்கலைஞர் விருது, இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம் – பத்திரிகை ஸ்தாபனம் வழங்கிய விருது (2018), காவேரிக்கலாமன்றம் – யாழ் பெட்டகம் இணைந்து வழங்கிய சிறந்த சூழலியாளர் விருது) அவருக்குக் கிடைத்துள்ளன.

2004 இல் பத்திரிகைத் துறைக்குள் நுழைந்த தமிழ்ச்செல்வன், சூழற்பாதுகாப்பு, சமூகப் பிரச்சினைகள், மக்கள் நலன் பற்றி கவனம் கொள்ளத்தக்கதாக எழுதினார். யுத்த முடிவுக்குப் பின்னர் இதை மேலும் வலுவாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

இன்று தமிழ்ச்செல்வனுடைய எழுத்துக்கு இருக்கின்ற வலு அவர் இருக்கின்ற வன்னிச் சூழலில் மிக அதிகமாகும். இதற்குக் காரணம், அவருடைய அரசியற் பார்வையும் வரலாற்று நோக்குமாகும். யுத்த முடிவுக்குப் பின்னரான (2009க்குப் பிறகான) உள்ளூர் மற்றும் உலகச் சூழலை தமிழ்ச்செல்வன் நிதானமாகப் புரிந்துள்ளார். இதனால், தேவையற்ற மயக்கங்களும் அதீத கற்பனைகளும் அவரிடமில்லை.

தன்னுடைய உறுதியான செயற்பாட்டின் வழியே தனக்கென ஒரு அடையாளத்தையும் முன்மாதிரியையும் உருவாக்கியுள்ளார் தமிழ்ச்செல்வன். அதுதான் தமிழ்ச்செல்வனின் சிறப்பு. இதற்குப் பிரதான காரணம், அவரிடம் தன்லாபங்களுக்கப்பாலான பாசாங்கற்ற சமூகப் பற்றுள்ளதாகும்.

தன்லாபங்களுக்காகச் சமரசங்களைச் செய்து கொள்ள முயற்சிப்பதில்லை. அப்படிச் செய்வது சிலருக்குத் தந்திரோபாயமான வழிமுறையாகப் படலாம். ஊடவியலாளர்களுக்கிருக்க வேண்டிய – அவர்கள் பேண வேண்டிய பன்முக ஈடுபாடும் அறிவும் தமிழ்ச்செல்வனிடமுள்ளன.




இலக்கிய வாசிப்பு, பன்முக அடிப்படையிலான வரலாற்றுத் தேடல், மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளித்தல், ஓவியம், ஒளிப்படம், சினிமா போன்றவற்றில் உள்ள ஈடுபாடு இதில் முதன்மையானது. இந்த ஈடுபாட்டின் நிமித்தமாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மலையகம், கொழும்பு அனஎ இவற்றுக்கான பயணங்களைச் செய்திருக்கிறார். கிளிநொச்சியில் இயங்கும் 'எழுத்தாளர் வாசகர் வட்டம்', 'திரைப்பட வட்டம்', 'மக்கள் சிந்தனைக் களம்', 'ஊடகவியலாளர் அமையம்' போன்றவற்றில் தமிழ்ச்செல்வன் முதன்மைச செயற்பாட்டாளர். இந்த நூல் வெளிவரும்போது அவர் சென்னை புத்தகக் காட்சியில் நிற்பார்.

தமிழ்ச்செல்வனுடைய திறனுக்கும் அடையாளத்துக்கும் சான்றாக இந்தச் சூழலியற் கட்டுரைகள் உள்ளன. ஒரு களச் செயற்பாடாக சூழலியல் நெருக்கடிப் பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று, விபரங்களைத் திரட்டி, ஒளிப்படங்களை எடுத்து ஆவணமாக்கப்பட்டவை இவை.

சூழலைக் கேடாக்குவதன் மூலம் நம் வாழ்கையும் நம்முடைய வாழ்க்கைச் சூழலையும் ஏன் உலகத்தையும் நாசமாக்குகிறோம் என்று எப்படித்தான் சொன்னாலும் அதைப் புரிந்து கொள்வோர் மிகக் குறைவு.

இதைப்போல வெவ்வேறு துறைகளைப் பற்றியும் தமிழ்ச்செல்வனுடைய கட்டுரைகள் உள்ளன. அவையும் தேர்ந்தெடுக்கப்பட்டு நூலாக்கம் பெற வேண்டும். இவையெல்லாம் எழுத்தோடு, புத்தகத்தோடு அடங்கி விடாமல், அறிவின் விளைவுகளாகும் என்ற புரிதலோடு நம்முடைய சூழலில் உரையாடல்களாகத் தொடர வேண்டும். அது அவசியமாகும்.

# 'தெளிவத்தை ஜோசப் கதைகள்' பெருந்தொகுப்பு தமிழ் இலக்கியத்துக்கு கிடைத்த அருங்களஞ்சியம்

தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் அனைத்தையும் தொகுத்து, முழுமையான தொகுப்பு ஒன்றினைக் கொண்டுவரும் முயற்சி பத்தாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது. 1979இல் யாழ்ப்பாணத்திலிருந்து வைகறை வெளியீட்டின் மூலம் தெளிவத்தை ஜோசப்பின் முதலாவது சிறுகதைத் தொகுப்பினை 'நாமிருக்கும் நாடே' என்ற தலைப்பில் வெளி


கோ. ஒளிவண்ணன்

யிட்டதன் நீட்சி போலவும் இது அமைந்தது. 'நாமிருக்கும் நாடே' என்ற தொகுப்பிற்காக அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்து பேருழைப்பை நல்கிய சிவம் கமலநாதன், எஸ்.பாலசுப்ரமணியம் ஆகியோரின் மறைவினைக் கண்ணீரோடு நினைவு கூருகிறேன். அவுஸ்திரேலியாவில் வாழும் மூக்கையா நடராஜா, கனடாவில் வாழும் வி.தேவராஜ் ஆகியோர் இன்றும் எம் முயற்சிக்குத் தொடர்ந்து ஊக்கம் தந்து வருகின்றனர்.

தன்னை நாடி வரும் அனைத்து எழுத்தாளர்களுக்கும், அவர்களின் கைவசம் இல்லாத கதைகளை எல்லாம் தனது சேகரத்திலிருந்து தேடிக்கொடுத்துதவிய தெளிவத்தை ஜோசப் அவர்களிடம் அவர் எழுதிய கதைகளே இல்லாமல்போனது துரதிர்ஷ்டவசமானது.

'நாமிருக்கும் நாடே' (1979) என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கூனல், சிலுவை, ஒரு தோட்டத்துப் பையன்கள் படம் பார்க்கப் போகிறார்கள் ஆகிய கதைகள் வெளியான இதழ்கள், பத்திரிகைகள் என்பன அழிந்துபோய்விட்டதென்றே கூறவேண்டும்.

குறிப்பாக, பதுளையில் வெளியான 'அல்லி' சஞ்சிகை பதுளைக்குள்ளேயே உலவிய, சில இதழ்களே வெளியாகி நின்றுபோன நிலையில், அந்த சஞ்சிகையை ஒரு பதினான்கு ஆண்டுகள் கழித்துத் தேட முனைந்தபோது அதனை எங்குமே பெற்றுக் கொள்ளமுடியவில்லை. தொகுப்பு வேலைகள் முடிந்து, அந்தக் கதையைப் பெறமுடியாது என்ற தீர்மானத்தில் அச்சுக்குத் தயாரானபோது, மூக்கையா நடராஜா ஓர் அற்புத சஞ்ஜீவியைப் போல அந்த 'அல்லி ' இதழை, பண்டாரவளையிலிருந்து கொண்டு வந்து தந்தார்.இன்று அந்த சஞ்சிகையையும் தொலைத்துவிட்டோம். உண்மையில் தெளிவத்தை ஜோசப்பின் அந்தக் கதை காப்பாற்றப்பட்டது என்றுதான் கூறவேண்டும்.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நான் தமிழகம் சென்றிருந்தபோது, தெளிவத்தை ஜோசப் நலங் குன்றி இருக்கிறார் என்றும்,சிறுகதைத் தொகுப்பை உடன் கொண்டுவர வேண்டுமென்றும் இலங்கையில் இருந்து எச்.எச்.விக்ரமசிங்க, மல்லியப்புசந்தி திலகர் ஆகிய இருவரும் தெரிவித்தனர்.

லண்டன் திரும்பியதும் முதல் வேலையாகக் கைவசம் உள்ள கதைகளைச் சேர்த்து, தொகுப்பைக் கொண்டுவந்து விடலாம் என்று முனைந்தபோதுதான், தேடியேயாகவேண்டிய கதைகளின் பட்டியல் கவலையைத் தந்தது.

இந்த வேளையில்தான் எள் என்றால் எண்ணெயாகச் செயற்படும் எச்.எச்.விக்கிரமசிங்க இந்தச் சுமையைத் தன் தோளில் சுமக்க முன்வந்தார். வீரகேசரி நடத்திய மலையகச் சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து, எஸ்.எம்.கார்மேகம் அவர்கள் 1971 இல் ' கதைக்கனிகள்' என்ற தலைப்பில் அத்தொகுதியை வெளியிட்டபோது, அதன் பின்னணியில் நின்று உழைத்தவர்கள் கே.கோவிந்தராஜும் எச்.எச்.விக்ரமசிங்கவும்தான்.

தொடர்ந்த அயராத நூல் பதிப்புப்பணிகள் மலையக இலக்கிய வரலாற்றின் பதிப்புத்


எச். எச். விக்கிரமசிங்க




துறையில் விக்ரமசிங்கவுக்கு தனி இடத்தைக் கொடுத்திருக்கிறது. அலைச்சலையும் உழைப்பினையும் துணிச்சலையும் வேண்டி நிற்கும் பயணம் இது.

தெளிவத்தை ஜோசப் மீது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் வாஞ்சை கொண்டிருந்த விக்கிரமசிங்க அவர்கள் இந்தச் சிறுகதைத் தொகுப்பாக்க முயற்சியைத் தனது சொந்தப் பணி போலக் கருதிச் செயலில் இறங்கினார்.

பெற்றோலும் டீசலும் கிடைக்காத தருணத்தில் கொழும்பின் அருஞ்சுவடிகள் திணைக்களத்திற்குச் சென்று வருவது எவ்வளவு காசை விழுங்கியிருக்கும் என்று சொல்லத்தேவையில்லை. மின்வெட்டு காரணமாக, அருஞ்சுவடிகள் திணைக்களம் மிகச் சொற்பநேரமே இயங்கியது. ஒவ்வொரு கதையையும் தேடிப் பிரதி எடுப்பது என்பது இன்னும் பணத்தைக் கொட்டியாக வேண்டிய நிலை. அருஞ்சுவடிகள் திணைக்களத்திலும் தேடிச் செல்லும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தும் இருக்கும் என்றும் சொல்வதற்கில்லை.

பத்திரிகை அலுவலகங்களின் நூலகங்களிலும், அவர்களின் பத்திரிகைச் சேமிப்புகளிலும் சென்று கதைகளைத் தேடிப் பாடுபட்டிருக்கிறார். சிறுகதைகள் வெளியான ஆண்டுகள் என்று ஜோசப் அவர்கள் உத்தேசமாகக் கூறிய ஆண்டுகளில், குறித்த பத்திரிகையில் ஒரு கதையும் வெளியாகவில்லை என்பதும் தெரிய வருகிறது.

இந்த எல்லாச் சிரமங்களின் மத்தியிலும் ஜோசப்பின் தேடி மாளாத 18 சிறுகதைகளை விக்கிரமசிங்க தேடிச் சேகரித்து அனுப்பியிருந்தார். என்னிடமும் சில மிக அரிதான கதைகள் இருந்தன.விக்ரமசிங்க இல்லை எனில், இந்தப் பெருந்தொகுப்பு சாத்தியமில்லை.

இவ்வளவிற்கும் அப்பால், சென்னையின் பிரபலமான எமரால்ட் வெளியீட்டகத்தின் உரிமையாளர் ஒளிவண்ணன் அவர்களுடன் பேசி, அவர்களின் வெளியீடாக இவ்வாண்டில் வெளியாவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொண்டிருந்தார். இந்த ஆண்டில் சென்னை புத்தகக் கண்காட்சியில் புதிய 60 தமிழ், ஆங்கில நூல்களை அந்தப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. எனக்கும் விக்ரமசிங்கவிற்குமான தொடர்பு 55 ஆண்டு காலங்களைத் தொடுகிறது. சிற்றெறும்பின் சுறுசுறுப்புடன் செயற்படுபவர் என்று அமரர் இர.சிவலிங்கம் விக்ரமசிங்கவை வர்ணித்ததில் வியப்பில்லை.

எங்கள் தொடர்பு அனைத்துமே மலையக நூல் வெளியீடுகள் சார்ந்தனவாகவே அமைந்தன. விக்ரமசிங்க விரிந்த தொடர்பு வட்டத்தைக் கொண்டவர்.

'தெளிவத்தை ஜோசப் கதைகள்' என்ற இப்பெருந்தொகுப்பு மலையகத்திற்கு மட்டுமல்ல, தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்திருக்கும் அருங்களஞ்சியமாகும்.

மு.நித்தியானந்தன்

# இராகலை டெல்மார் பிரதேசத்தில் திறன் வகுப்பறை திறந்துவைப்பு

நுவரெலியா மாவட்டத்தின் இராகலை நகரில் உள்ள டெல்மார் பிரதேசத்தில் கல்வியில் நிலவுகின்ற பின்னடைவை நிவர்த்தி செய்யும்முகமாக இப்பிரதேசத்தில் கல்வி கற்று பல்கலைக்கழகம் மற்றும் கல்வியில் கல்லூரிகளுக்குத் தெரிவான மாணவ மாணவிகளால் உருவாக்கப்பட்ட அமைப்பே வள்ளுவர் கல்வி அபிவிருத்தி மன்றம் ஆகும்.

வள்ளுவர் கல்வி அபிவிருத்தி மன்றம் கடந்த 2021ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் செயற்பாடுகளில் ஒன்றாக டெல்மார் பிரதேசத்திற்கான திறன் வகுப்பறை உருவாக்கம் காணப்படுகின்றது.

திறன் வகுப்பறையானது இப்பகுதி மாணவர்களுக்கு இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமானதொன்றாகக் காணப்படுகிறது. இது மாணவர்களின் இணையவழி கற்றல் நடவடிக்கைகளுக்கும் மாணவர்களின் தேடல்களுக்கும் மிகப் பயனுடையதாகக் காணப்படும் என்ற நோக்கத்தோடு வள்ளுவர் திறன் வகுப்பறையும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வலப்பனை கல்வி வலய கோட்டக் கல்வி பணிப்பாளர் யோகராஜா விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், "இந்த திறன் வகுப்பறையானது எமது பிரதேசத்திற்கு கிடைத்த




பெரும் உதவியாகும். இந்த வகுப்பறையைப் பயன்படுத்தி எமது மாணவர்கள் கல்வியில் மேம்பட வேண்டும். அத்துடன் இதற்கு உதவி செய்த Ratnam Foundation அமைப்பினர், Vision Global Empowerment நிறுவனத்தினர் மற்றும் W. Harichandran ( USA ) ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

இப்பாடசாலை அதிபர் நந்தகுமார், தோட்ட பொதுமக்கள், மன்றத்தின் ஏனைய உறுப்பினர்கள், ஏனைய தன்னார்வலர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.





# உலக நலன் வேண்டி தஞ்சையில் சைவசமய சிந்தனை பெருவிழா

உலக நலன் வேண்டி திருமுறைப் பாராயணம் மற்றும் சைவ சமய சிந்தனைப் பெருவிழா அண்மையில் தமிழ்நாடு தஞ்சை, கரந்தை தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

இப்பெருவிழாவின் போது 'வேளாக்குறிச்சி ஆதீனம்' குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசியபரமாச்சாரிய சுவாமிகள், 'திருமுறைக் காவலர்' என்ற உயரிய விருதை திருநெறிய தமிழ் சைவபாதுகாப்பு பேரவையின் செயலாளர் பாவை சசிகுமார் அவர்களுக்கு வழங்கி கௌரவித்துள்ளார்.

இப்பெருவிழாவில் சைவசமய பாதுகாப்பு பேரவை நிறுவனர் சிவச.நடராசன், சதுரகிரிஆதீனம் தவத்திரு கணேசமூர்த்தி மவுனஅடிகளார், கோவை ஸ்ரீவிஸ்வலிங்க மகாசுவாமிகள், தஞ்சை மாநகர உறுப்பினர் சுகந்தி துரைசிங்கம் மற்றும் ஓதுவார்கள், சிவனடியார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் மூன்று மாதங்கள்!

# அதிக கட்சிகள் எதிரணியாக இணைவதால் ஆளும் பா.ஜ.க எதிர்நோக்கும் நெருக்கடி!

## பிரதமர் மோடி - அ.தி.மு.க பிளவு நிரந்தரமானதா?

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்களே உள்ளன. ஆளும் பா.ஜ.க கூட்டணி இதுவரை பல மாநிலங்களில் தனது கூட்டணியை உறுதி செய்யவில்லை. ஆனால், பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகக் களம் இறங்கியுள்ள காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' என்ற கூட்டணி பல மாநிலங்களில் தங்களின் கூட்டணியை இதுவரை உறுதி செய்துவிட்டது.

இந்தக் கூட்டணியில் தற்போதைய நிலைவரப்படி 28 கட்சிகள் உள்ளன. அதன் அடுத்த கட்டமாக மகாராஷ்டிர மாநிலத்தில் 'இந்தியா' கூட்டணி தங்களின் தொகுதிப் பங்கீட்டை உறுதி செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 'மகாவிகாஸ் அகாடி' எனக் கூட்டணி சேர்ந்துள்ள காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், உத்தவ் சிவசேனா ஆகிய கட்சிகளிடையே அண்மையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அம்மாநிலத்தில் உள்ள 48 தொகுதிகளில்



காங்கிரஸும், சிவசேனாவும் தலா 20 தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது. அதைப் போன்று சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் 6 தொகுதிகளில் போட்டியிட உள்ளதாகவும் கூறப்படுகிறது. அம்பேத்கர் பேரன் பிரகாஷ் அம்பேத்கர் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.

டெல்லியைப் பொறுத்தளவில் மொத்தம் 7 தொகுதிகள் உள்ளன. அதில் 3 தொகுதிகளைக் காங்கிரசுக்கு விட்டுத்தருவதற்கு ஆம் ஆத்மி முடிவு செய்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. பஞ்சாபில் உள்ள மொத்தம் 13 தொகுதிகளில் 6 தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடுவதற்கு ஆம் ஆத்மி சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இதற்காகக் குஜராத், அரியானா, கோவா ஆகிய மாநிலங்களில் ஆம் ஆத்மி கட்சி 5 இடங்களைக் கேட்டுள்ளதாகவும் டெல்லி வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது. இதற்காக கர்நாடக மாநிலத்தில் காங்கிரசுடன் இணைந்து செயல்பட ஆம் ஆத்மி சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கு மாறாக சில மாநிலங்களில் ஏற்கனவே இருந்த கூட்டணியை பா.ஜ.க இம்முறை இழந்துள்ளது. அதற்குச் சரியான உதாரணம் அ.தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும் இடையிலான கூட்டணியில் ஏற்பட்ட முறிவு ஆகும். தமிழ்நாட்டில் அ.தி.மு.க கூட்டணியைப் பலமாக நம்பி வந்த பா.ஜ.க இப்போது அதனை இழந்திருப்பது மிகப்பெரிய சறுக்கலாக அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது. இந்நிலையில்தான் அ.தி.மு.கவின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்று முடிந்துள்ளது.

அதில் வழக்கம்போல் அ.தி.மு.க கூட்டணி குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் எடப்பாடி பழனிசாமிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு கட்




சியில் இடம்பெறுகின்ற வழக்கமான நடைமுறைதான் இது. ஆனாலும், இறுதி வரை பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்பதில் உறுதியாக எடப்பாடி பழனிசாமி நிற்பாரா? என்பது சந்தேகமாகவே உள்ளது. காரணம், பா.ஜ.கவைச் சேர்ந்த பியூஷ் கோயல் தற்போது தமிழ்நாட்டில் முகாமிட்டுள்ளார். அவர் அ.தி.மு.கவை இழுத்தெடுக்கும் காரியங்களில் இறங்கி உள்ளார் என்று செய்திகள் கசிந்து வருகின்றன.

"சமரசத்திற்கான கதவு திறந்தே உள்ளது" என்று அவர் கூறியிருப்பதை மிக உன்னிப்பாகப் பார்க்க வேண்டியுள்ளது. எனவே மீண்டும் அ.தி.மு.க_ பா.ஜ.க இடையே கூட்டணி மலரும் என்று பேச்சுக்கள் அடிபடுகின்றன.

"இந்தப் பிரிவு என்பதே அமித்ஷாவை எடப்பாடி பழனிசாமி சந்தித்துவிட்டு வந்த பின்னர் ஏற்பட்ட பிரிவு. அவர்கள் இருவரும் என்ன பேசினார்கள் என்பதை இதுவரை தெளிவுபடுத்தவில்லை. அதன் பின்னர் எஸ்.டி.பி.ஐ கட்சியின் மாநாட்டில் பழனிசாமி பங்கேற்றுள்ளார். எஸ்.டி.பி.ஐ கட்சியின் கொள்கை மீண்டும் மோடி ஆட்சிக்கு வரக் கூடாது என்பதாக இருக்கிறது. அந்தக் கொள்கையை அ.தி.மு.க ஏற்கிறதா என்பது இதுவரை விளக்கப்படவில்லை. அந்த மாநாட்டில் எடப்பாடி பழனிசாமி எஸ்.டி.பி.ஐ கட்சியின் தலைவர் பேசுவதற்கு முன்பாகவே பேசிவிட்டு வந்துவிட்டார். ஆனால், பிரதமர் நரேந்திர மோடியைக் கண்டித்து அந்த மாநாட்டில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதைக் காதுகொடுத்துக் கேட்கக்கூட இல்லை எடப்பாடி பழனிசாமி. அதற்கு முன்பே புறப்பட்டு விட்டார்.

சிறுபான்மையினர் வாக்குகள் எனக்குக் கிடைக்கும் என்கிறார் பழனிசாமி. அவர் சி.ஏ.ஏ.வை ஆதரித்தார். முத்தலாக்கை ஆதரித்தார். ஆக, சிறுபான்மையினர் அ.தி.மு.க பக்கம் வருவதற்கான காரணங்கள் வலுவாக இல்லை. தி.மு.கவைச் சிறுபான்மையினர் வெறுப்பதற்கான காரணமும் வலுவாக இல்லை. பா.ஜ.கவை விட்டு அ.தி.மு.க பிரிந்ததற்கான காரணங்களும் வலுவாக இல்லை. ஆகவே இவர்கள் மீண்டும் இணைவார்கள் என்ற சந்தேகம் வலுத்துக் கொண்டே வருகிறது" என்கிறார் தமிழ்நாட்டின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

"2019 இல்கூட பா.ஜ.க கூட்டணி என்பது



வேண்டாம் என்றுதான் அ.தி.மு.க தொண்டர்கள் பெரும்பாலானவர்கள் விரும்பினார்கள். ஆனால், தலைவர்கள் விருப்பம் அப்படி இல்லை. அவர்கள் பா.ஜ.கவுடன் தொடர்ந்து கூட்டணியை வைத்து வந்தார்கள். இந்த 2024 தேர்தலின் போது பா.ஜ.கவுடன் கூட்டணி வேண்டாம் என்றே அ.தி.மு.க தொண்டர்கள் விரும்புகிறார்கள். இந்தமுறை தொண்டர்கள் விருப்பமும் தலைவர்கள் விருப்பமும் ஒன்றாகவே உள்ளது. ஆகவே, எடப்பாடி பா.ஜ.க கூட்டணியிலிருந்து பிரிந்து வந்திருக்கிறார். எடப்பாடி பா.ஜ.கவுடன் இருந்த கூட்டணியை விலக்கிக் கொண்ட பிறகு பா.ம.கவோ அல்லது புதிய தமிழகமோ, தே.மு.தி.கவோ, ஜான் பாண்டியனோ யாருமே இதுவரை அ.தி.மு.க கூட்டணியை ஆதரிப்பதாகச் சொல்லவில்லை.

ஒருமுறை ஜெயலலிதா சொன்னார், கண்ணுக்கு எட்டிய தூரத்தில் எதிரிகளே தெரியவில்லை என்று. இப்போது எடப்பாடி கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கூட்டணிக் கட்சிகள் எதுவும் தெரிவதைப் போல் நம்மால் பார்க்க முடியவில்லை. எடப்பாடி 'இந்தியா' கூட்டணியிலிருந்து சில கட்சிகள் பிரிந்து தங்களுடன் கூட்டணிக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறார். அந்த 'இந்தியா' கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் ஒருமித்த கொள்கை நரேந்திர மோடி மீண்டும் ஆட்சிக்கு வரக் கூடாது என்பதாக உள்ளது. அந்தக் கொள்கையோடு எடப்பாடி ஒத்துப் போவாரா என்பது சந்தேகம்.

இப்போதைக்கு எஸ்.டி.பி.ஐ கட்சி மட்டும்தான் அ.தி.மு.கவுடன் உள்ளது. தற்போதைக்கு எடப்பாடிக்கு அது மட்டுமே சாதகமாக உள்ளது. எதிர்வரும் தேர்தலில் அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் தனித்தனியே போட்டியிட்டால் அது இரு கட்சிகளுக்கும் பயன் தராது. இருவரும் இணைந்து நின்றால், தி.மு.க கூட்டணியைக் கடுமையாக எதிர்க்க முடியும். பா.ஜ.கவும், அ.தி.மு.கவும் மீண்டும் கூட்டணி வைக்கமாட்டார்கள் என்பதை உறுதியாகச் சொல்வதற்கில்லை. தேர்தல் நேரத்தில் அந்தத் திரை கண்டிப்பாக விலகும்" என்கிறார் அந்த மூத்த பத்திரிகையாளர்.

# இன்றைய பலன்கள்

## ( 13. 01. 2024 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. ஆயினும் இது போன்ற காலங்களில் மனக்கலக்கம் கொஞ்சம் அதிகரிக்க தான் செய்யும்.

**ரிஷபம்:**
இடம், பூமி சேர்க்கை வீடு கட்டும், கட்டிய வீட்டை பழுது பார்க்கும் யோகம் உண்டு. பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். வீடு இடம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும்.

**கடகம்:**
பொருளாதார பற்றாக்குறையை சமாளிக்க கடன் வாங்கும் சூழல் உண்டு. வீடு,இடம் சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முடிவு வெற்றி தரும்.

**சிம்மம்:**
உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த இலாகா மாற்றம் கிடைக்கும். அலுவலகப் பணி சார்பாக அடிக்கடி பயணங்களும் ஏற்படும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**கன்னி:**
வீடு மாற்றம் இடமாற்றம் எதிர்பார்த்த விதத்தில் வரலாம். வாடகை வீட்டில் வசிப்பவர்கள் சொந்த வீட்டில் குடியேறு வாய்ப்பு கிட்டும்.

**துலாம்:**
புதிய வாகனங்கள் வாங்கி பயணிக்கும் வாய்ப்பு கைகூடும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். கைநழுவிச் சென்ற வரன்கள் மீண்டும் வரலாம்.

**விருச்சிகம்:**
வீடு வாங்கும் யோகம் வந்து சேரும். வெகு நாட்களாக எதிர்பார்த்த காரியங்கள் ஒவ்வொன்றாக முடியும். பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு:**
பிள்ளைகளின் கல்யாண கனவுகள் நனவாக வழி பிறக்கும். பிள்ளைகள் வழியில் பெரும்விரயம் ஏற்படலாம்.

**மகரம்:**
அரசு சார்ந்த பணிகளில் சிறந்த விண்ணப்பித்திருப்பவர்களுக்கு அது கைகூடும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

**கும்பம்:**
சக பணியாளர்களால் சிறு சிறு தொல்லைகள் ஏற்படலாம். தொழில் நடத்துபவர்களுக்கு போதிய மூலதனம் இல்லாமல் புதிய பங்குதாரர்களை சேர்க்க விரும்புவர்.

**மீனம்:**
தேவைகள் பூர்த்தியானாலும் கூட சில சமயங்களில் மனக்குழப்பம் அதிகரிக்கும். தந்தை வழியில் இருந்து விரிசல் அகலும்.

## 2024 இல் 20 இலட்சம்...

அதிகரித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே,

“கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது தற்போது சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ளது. சுமார் மூன்று வருடங்களாக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்த சுற்றுலாத்துறை, இன்று ஓரளவு ஸ்திரமான நிலைக்கு வந்துள்ளது. 2023 டிசெம்பர் இறுதியில் 106 % சுற்றுலாத்துறையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## நன்னீர் மீன்பிடித்துறைக்கான...

அபிவிருத்தி அதிகார சபையால் (நக்டா) தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாக கடந்த புதன்கிழமை கடற்றொழில் அமைச்சு மற்றும் நக்டா அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், இலங்கையிலுள்ள பிரதான மீன் கருத்தரிப்பு மத்திய நிலையங்களான உடவளவை, தம்புள்ளை, செவனபிட்டிய, இறம்படகல்ல, இங்கினியாகலை உள்ளிட்ட கருத்தரிப்பு மத்திய நிலையங்களின் அபிவிருத்திக்காக 100 மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதனைப் பயன்படுத்தி அவற்றில் நன்னீர் கருத்தரிப்பு மத்திய நிலையங்களை தொடங்குமாறும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

வட மாகாணத்துக்காக கடந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாவுக்கான திட்டங்களை விரைவில் தயாரித்து தமக்கு அனுப்புமாறும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், "நன்னீர் மீன் வளர்ப்பை வெற்றிகரமாக முன்னெடுத்து அதனூடாக கிடைக்கும் வருமானத்தை தேசிய பொருளாதாரத்தில் இணைத்துக் கொள்வதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். ஜனாதிபதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென்றார்.

கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாக மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குரிய அறிக்கைகளை தமக்கு வழங்குமாறு தெரிவித்த அமைச்சர், தான் விரைவில் பிரதான கருத்தரிப்பு மத்திய நிலையங்களுக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

## பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு...

பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எம்.பி. தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அனுர குமார திசாநாயக்க எம்.பி., ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு மேலதிகமாக 2000 இலட்சம் ரூபா ஒதுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர்,

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை . மேலதிக மானியம் மற்றும் குறைநிரப்பு பிரேரணை தொடர்பில் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு தெளிவில்லாமல் இருப்பது கவலைக்குரியது.

டெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கு 1300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். டெலிகொம் நிறுவனத்துக்கு சொந்தமான 0.73 வீத பங்குகள் தேசிய சேமிப்பு வங்கி வசமுள்ளது. இந்த பங்குகளை திறைசேரிக்கு சொந்தமாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களையும், பாராளுமன்றத்தையும் தவறாக வழிநடத்தும் வகையில் குற்றச்சாட்டுக்களை அவர் முன்வைத்துள்ளார்.

## சமிந்த விஜேசிறி MPயின்...

பதுளை தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியின் இராஜினாமாவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு நயன வாசலதிலக நியமிக்கப்பட்டார்.

பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரியில் தனது கல்வியை நிறைவு செய்த அவர், சமையல்கலை பட்டப்படிப்பையும் வர்த்தக முகாமைத்துவ பட்டப்படிப்பை சுவிட்ஸர்லாந்திலும் நிறைவு செய்துள்ளார். அத்துடன் சமையல் கலைஞராக பல வருட அனுபவம் கொண்ட அவர், அவுஸ்திரேலியாவிலுள்ள பிரபல ஹோட்டலொன்றிலும் இலங்கையிலுள்ள பிரபல ஹோட்டலொன்றிலும் சமையல் கலைஞராக சேவையாற்றினார். 2015 இல் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலுக்கு பிரவேசித்த அவர், 2020 பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி பதுளை தேர்தல் மாவட்டத்தில் 31,307 விருப்பு வாக்குகளை பெற்றார்.

## 18 பிரதேச செயலகப் பிரிவுகளில்...

நிலவி வரும் சீரற்ற காலநிலை தற்போது சற்று தணிந்து வருகின்ற போதிலும் வெள்ள நிலைமை காரணமாக இம்மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் பேர் பாதிப்படைந்துள்ளதாக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தெரிவித்தார்.

## 05 வயதுக்குட்பட்ட பிள்ளைகள்...

மையத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே,

இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது, "இதற்கு முன்னரான சட்டத்தில் இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளை விட்டுவிட்டு வெளிநாட்டில் வேலை செய்தல் தடைசெய்யப்பட்டிருந்தது.

வெளிநாட்டுக்கு வேலை நிமித்தம் செல்லும் பெண்களின் பிள்ளைகளில் பெரும்பாலானோர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சம்பவங்களும் உள்ளதுடன், 7 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன.

பெற்றோர் பராமரிப்பின்றி பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அவர்களின் அசௌகரியத்தின் நிமித்தம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு பதிலாக காணொளிகள் மூலம் விசாரண மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## தைப்பொங்கல் தினத்தன்று...

புனிதமானதாகும். ஆகையால் தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மற்றும் பதுளையில் தைப்பொங்கல் தினத்தன்று மதுபான சாலைகளை மூட நடவடிக்கை எடுக்குமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் இராஜாங்க அமைச்சர் கோரிக்கை விடுத்து, கடிதம் அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "நுவரெலியா மற்றும் பதுளையிலுள்ள மதுபான சாலைகளில் தமிழர்களே அதிகளவாக தொழில் புரிகின்றனர். அவர்களும் தைப்பொங்கலை தமது குடும்பத்தினருடன் கொண்டாடுவதற்கும் தைத்திருநாளை புனிதமாக கடைப்பிடிப்பதற்கும் வழி செய்ய வேண்டும். ஆகையால் தைப் பொங்கலன்று நுவரெலியா, பதுளையில் மதுபான சாலைகளை ஒரு தினத்துக்கு மூடுமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "கீத்ராத் 60" இன்று



தினகரன் , தினகரன் வாரமஞ்சரி, சக்தி தொலைக்காட்சி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் " கீத்ராத் 60" இன்று மாலை 6.30 மணிக்கு அக்கரைப்பற்று தேசமான்ய ஏ. பி. அப்துல் கையூம் தலைமையில், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக பிரபல தொழிலதிபர் செல்லமுத்து ரவீந்திரன் கலந்து சிறப்பிக்கின்றார். பிரபல இசைக் கலைஞர்கள் பஸால் ஜின்னா, அயாஸ் சவாஹிர், ஹரிதாஸ் கண்ணா, எஸ் . ஆனந்த ராஜா இசை வழங்குகிறார்கள்.

சிறப்புப் பாடகராக சிங்கப்பூர் பிரபல இஸ்லாமிய கீதப் பாடகர் பஃரிஹுல்லாஹ் கலந்துகொள்கிறார். பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்படவுள்ளதுடன் பிரபல எழுத்தாளர் மொழிவாணன், இசைக்கலைஞர் அயாஸ் சவாஹிர், பன்முக ஆளுமை ஹுமைரா அல் அமீன், கவிஞர் கிண்ணியா அமீர் அலி, பிரபல சமூகசேவையாளர்கள் முஹம்மது முஸம்மில் ஜே.பி., ஷானாஸ் ராஜுதீன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## தமிழ்க் கைதிகளை உறவினர்கள்...

நடவடிக்கை) சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் முறையான சுகாதார, பாதுகாப்பு முறைகளின் கீழ் கைதிகளுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளில் ஒழுக்கத்தை...

தெரிவித்த அவர், ஏற்கெனவே ஒழுக்கம் தொடர்பான விதிகளை உள்ளடக்கிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டதாகவும் ஆயினும் அதனை கடைப்பிடிக்காமையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். இந்நிலையிலேயே புதிய சுற்றுநிருபத்தை வெளியிடவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## வசந்தம், தெரண TVயில்...

அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் நோக்குடனேயே ஜனாதிபதியின் வடக்கு விஜயம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க.வின் மாவட்ட மட்ட...

தலைமையில் நடைபெறுகிறது. இதில் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, அமைச்சர் மனுஷ நாணயக்கார, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்கின்றனர்.

14ஆம் திகதி தங்காலை மற்றும் களுத்துறையிலும், 15ஆம் திகதி இரத்தினபுரியிலும் விசேட மாவட்ட மாநாடுகள் நடைபெறவுள்ளன.

## பொருளாதாரத்தில் இலங்கை...

நிதி அமைச்சர் இலங்கைக்கு இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதரத்தை நிலைப்படுத்தி மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் கடன் நிலைப்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தி பல்வேறு சிறப்பான பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொண்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் இலங்கையின் கடன் நீடிப்பு முயற்சிகளுக்கு ஜப்பான் வழங்கிய சிறப்பான ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கு ஜப்பான் யென்களாக வழக்கப்பட்டு வந்த கடன்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஜப்பான் நிதி அமைச்சர், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் சங்கத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மேற்பார்வையின் பின்னர் கடன் நிலைத் தன்மை தொடர்பில் அறிவிப்பு விடுத்த பின்னர் மேற்படி கடன்களை மீள வழங்கும் இயலுமை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் கடல் பாதுகாப்பு தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும், இலங்கையின் எதிர்கால பயணத்திற்காக ஜப்பானினால் வழங்க முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஜப்பான் – இலங்கை தொடர்புகளை மேலும் பலப்படுத்த, தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வர்த்தக துறையை சிறந்த மட்டத்தில் பாதுகாப்பதற்கு ஏற்றுமதி தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கான புதிய பொருளாதார முறைமை தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். இதன்போது இலங்கையின் கடன் நீடிப்பு செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் விளக்கமளித்த இலங்கை தரப்பினர், கடன் நீடிப்பை இவ்வருடத்தின் முதல் காலாண்டில் நிறைவு செய்வதே இலங்கையின் இலக்காகும் என தெரிவித்தனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீள் நிர்மாண பணிகள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, ஜப்பான் நிதி உதவியில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டிருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜப்பான் தூதுக் குழுவினர் மற்றும் இலங்கை சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## நாட்டின் பொருளாதார நிலைமையை...

ஜனாதிபதிக்கே உள்ளதாகவும் குறிப்பிட்டார். காலி ஹபராதுவ பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது ஊடகவியலாளர்களுக்கு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மேலும் கூறியதாவது, "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பொருளாதரத்தை நிலைநாட்ட முடியுமென்பதுடன், பொருளாதாரத்தை முன்னேற்ற நினைக்கும் அனைவரும் அவருடன் இணைந்து கொள்வர்.

எதிர்காலத்தில் எப்படி போட்டியிடுவதென்பதை நாம் தீர்மானிப்போம் . எவ்வாறான ஏற்பாடுகள் இருந்தாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிட்சயம் போட்டியிடுவார்.

தற்போதைய நிலையை போன்று ஒருநிலை இருந்தாலும், நாம் வாக்குகளுக்காக எந்தொரு நிவாரணங்களையும் வாங்கவில்லை. வாக்குகளை எதிர்பார்த்து இருந்தால், இவ்வாறு வரிகளை விதிக்க முடியாது. நாம் இவ்வாறான முறைமையை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதால் சில வழக்கறிஞர்கள் எமக்கு எதிரே கோஷம் எழுப்புகிறார்கள். ஆனால் நாட்டின் நலனுக்காக நாம் செய்யும் விடயங்களை ஒருபோதும் அரசியலாக்கியது இல்லை

நாம் மீண்டும் பணத்தை அச்சடிக்கவில்லை. அதனாலேயே நாம் வரியை விதித்து இருக்கிறோம் . இவை அரசியல் ரீதியாக பாதகமானவை. எனவே உள்ளவர்களிடம் வரியைப் பெற்று அனைவரும் வாழக்கூடிய சூழலை உருவாக்க நாம் செயல்படுகிறோம் . நாட்டின் பொருளாதாரம் மேம்படும் போது மக்களுக்கு வரி குறைக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படும் .

எமது மக்கள் வெளிநாட்டுக்கு வேலைகளுக்குச் செல்லும் போது எதிர்க்கட்சித் தலைவர் வெளிநாட்டு வேலைகளை சுனாமி என்று கூறுகிறார். தென் கொரியாக்கு வேலைக்கு செல்பவர்கள் நாடு திரும்பிய பிறகு, அவர்கள் தங்கள் அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்தி புதிய தொழில்களை உருவாக்கினர். இது அவருக்குப் புரியவில்லை ,

மார்ச் மாதத்துக்குள் மின் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கின்றோம் . இங்கு பொருளாதாரம் வலுவாக இருப்பதால்தான் சலுகைகள் வழங்கப்படுகின்றன. மற்றபடி எந்தொரு நிலையிலும் தேர்தலை எதிர்பார்த்து சலுகைகளை வழங்கவில்லை

நான் கொடுப்பனவுகளை அதிகரிக்க விரும்பியதனாலே ஜனவரி முதல் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்தேன். எனவே அதிகரித்த பத்தாயிரத்தை பிப்ரவரி முதல் வழங்க ஏற்பாடு செய்வோம். மருத்துவர்களுக்கான கொடுப்பனவு குறைவாக உள்ளதால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதையும், இந்நாட்டில் சுகாதாரத்துறை வீழ்ச்சியடைவதையும் தடுக்கும் வகையில் வைத்தியர்களுக்காண கொடுப்பனவை வழங்க தீர்மானித்தோம். பல்கலைக் கழக ஆசிரியர்களின் உதவித்தொகையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. அவர்களும் நாட்டை விட்டு வெளியேறினால் நாட்டின் எதிர்காலம் பெரிதும் பாதிக்கப்படும்

இந்த ஆண்டுக்கு தொழில்முனைவோரின் ஆண்டு என பெயரிட்டுள்ளோம். வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு இலங்கைக்கு திரும்பிய தொழில்முனைவோரை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

பணம் இல்லாததால் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என திறைசேரி கூறுகிறது. அரசின் இலாபத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் திறைசேரி அதிகாரிகளுக்குப் பிடிக்காதல் VAT இல்லாதொழிக்க முயற்சிக்கிறார்கள்"என்றார்.

## ஏற்றுமதிப்பயிர் உற்பத்தியை...

வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சபையில் தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் மூலம் பெருமளவு வேலை வாய்ப்புகளும் உருவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வேலுகுமார் எம்.பி. முன்வைத்த பெருந்தோட்டத்துறை சம்பந்தமான தனிநபர் பிரேரணை மீதான கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர்,

புதிய பெருந்தோட்ட மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் ஏற்றுமதி செய்யக்கூடிய பயிர்களை உற்பத்தி செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்காக 300 ஏக்கரைக் கொண்ட காணி குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேர்மையான விதத்தில் இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் பெருமளவு வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்படும். இந்த விவசாயக் காணியை குத்தகைக்கு விடுவதற்கான வசதிகளை வழங்குவதற்கான புதிய சட்டத்தை கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. காணிகளை இனம் காணுவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக நிபுணர்கள் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது தொடர்பான அடிப்படை வரைபு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## தங்கம் மற்றும் வெளிநாட்டு...

கடையொன்றின் உரிமையாளரான இவ் வர்த்தகருக்கு காத்தானகுடியிலும் மட்டக்களப்பிலும் இரண்டு நகைக் கடைகள் உள்ளதாகவும், அந்தக் கடைகளிலிருந்து உருகிய தங்க கட்டிகளை வாரத்தில் இரண்டு நாட்கள் காத்தான்குடியிலிருந்து கொழும்பு செட்டித் தெருவிலுள்ள நகைக் கடைக்கு வாரத்தில் இரண்டு முறை கொண்டு வருவதுண்டு. அவருக்கு நன்கு பரீட்சையமான பஸ் சாரதிகள் மூலம் இவற்றை அனுப்பி வைப்பதாகவும் பொலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் (11) அதிகாலை கொழும்பு வந்த தனியார் பஸ்சிலும் இவ்வாறு தங்கம் மற்றும் வெளிநாட்டு கரண்சிகள் அடங்கிய பொதி ஒன்று கொடுத்து அனுப்பப்பட்டுள்ளதுடன் பஸ் கொழும்பை வந்தடைந்த பின்னர் பஸ் சாரதி கடை ஊழியர் ஒருவருக்கு அதிகாலை 05 மணியளவில் தொலைபேசி மூலம் பொதியை பெற்றுக்கொள்ள வருமாறு தகவல் வழங்கியுள்ளார்.

பஸ் சாரதியிடமிருந்து அழைப்பு வந்தவுடன் தங்கம் மற்றும் வெளிநாட்டு கரண்சி அடங்கிய பொதியை பெற்றுக் கொள்வதற்காக நகைக்கடையிலுள்ள ஒரு ஊழியர் மற்றொரு ஊழியரை எழுப்பி புறக்கோட்டையில் ஐந்து லாம்புச் சந்திக்கு அனுப்பிவிட்டு அவர் பொதியுடன் வரும்வரை நகைக் கடையின் முன்பக்கமாக அமர்ந்து தான் அனுப்பிய ஊழியருக்காக கடையின் முன் படிக்கட்டில் அமர்ந்திருந்துள்ளார். பஸ்சிலிருந்து பொதியை வாங்கிய ஊழியர் அதனை தனது இடுப்பில் மறைத்து வைத்துக்கொண்டு செட்டியார் தெருவில் நகைக்கடை அருகே வந்தவுடன் அவரை பின் தொடர்ந்து வந்த முச்சக்கரவண்டியிலிருந்து திடீரென இறங்கிய நபர் ஒருவர் நகைக்கடை ஊழியரின் கழுத்தை இறுகப்பிடித்து அழுத்தியபடி நாங்கள் சீ.ஐ.டி எனக் கூறி பலாத்காரமாக முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்றதாக போலீஸார் தெரிவித்தனர்.

அப்போது, கடைக்கு முன்னால் அமர்ந்தி ருந்த மற்றைய ஊழியர் தடுக்க முற்பட்டபோது, முச்சக்கர வ ண்டியிலிருந்த நப ர் கூரிய கத்தியைக் காட்டி அச்சுறுத்திவிட்டு ஊழியரைக் கடத்திக் கொண்டு மிக வேகமாக செட்டித் தெரு ஊடாக கொச்சிக்கடை பிரதேசத்தை நோக்கி தப்பிச் சென்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊழியர் கடத்தப்பட்ட போது, அவரது இடுப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்கம் மற்றும் வெளிநாட்டு கரண்சி கள் அடங்கிய பொதியை கொள்ளையடித்த பின்னர் ஊழியரை கொச்சிக்கடை தேவாலயத்துக்கு முன்பாக இறக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லலித் சிலோகமவின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எச்.கே அனுரஜித் உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



## அம்பாறையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் விஜயம்

(ஒலுவில் விசேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம நேற்றுமுன்தினம் (11) நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதனால் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களை பார்வையிட்டார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்துள்ளதுடன் மற்றும் மக்களுக்கான நிவாரண பணிகளை துரிதமாக முன்னெடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தொண்டு நிறுவனங்களினால் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது மாவட்டத்தில் மழை ஓய்ந்துள்ள நிலையில் நீர்மட்டங்கள் அதிகரித்து காணப்படுவதால் மேலும் வெள்ளநிலமை ஏற்பட்டு வருகின்றது.

## 12 வருடங்களுக்கு பின்னர் வெள்ளத்தில் மூழ்கியது காரைதீவு பிரதான வீதி!





(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு பிரதான வீதி கடந்த 12 வருடங்களுக்கு பின்னர் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டதால் இந்த வெள்ளம் பரவுகிறது. 2010 ஆம் ஆண்டில் இத்தகையதொரு வெள்ளம் பரவியிருந்தது. மக்கள் சிரமத்திற்கு மத்தியில் பயணிப்பதை காணக்கூடியதாகவிருக்கின்றது. பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கையும் தொடர்கிறது. காரைதீவு அக்கரைப்பற்று வீதி, காரைதீவு அம்பாறை வீதிகளில் வெள்ளம் பாய்வதால் காலையில் போக்குவரத்துக்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை. பின்னர் பாரிய வாகனங்கள் செல்ல அனுமதித்தனர். இதேவேளை காரைதீவு மாவடி பள்ளி வீதி முற்றாகவே அமிழ்ந்திருக்கின்றது. பாரிய வாகனங்கள் மாத்திரம் செல்ல பொலிஸார் அனுமதித்தனர்.

## பாலமுனை பிரதேசத்தில் விசேட போதைப்பொருள் பரிசோதனை

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் "யுத்திய மெஹெயும" விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பு நேற்றுமுன்தினம் (11) அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியிலுள்ள பாலமுனை பொலிஸ் சோதனை சாவடியில் மேற்கொள்ளப்பட்டது. இவ்விசேட சுற்றிவளைப்பை அக்கரைப்பற்று பொலிஸாருடம் இணைந்து விசேட அதிரடிப்படையினரும் மேற்கொண்டனர்.

இதன்போது அவ்வீதி வழியாக வருகை தந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் மற்றும் தனியார் பஸ்களில் பயணித்தோர் கீழே இறக்கப்பட்டு அவர்களது பைகள் பரிசோதிக்கப்பட்டன. அத்தோடு வாகனங்களும் இதன்போது சோதனைக்குட்படுத்தப்பட்டன.

## கோழி பண்ணைகளில் திருட்டு : தந்தை, மகன் கைது

(மட்டக்களப்பு குறூப் நிருபர் )

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரு பாரிய கோழி பண்ணைகளை உடைத்து கொள்ளையிட்ட தந்தையையும் மகனையும் நேற்றுமுன் மாலை (11) காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரு கோழிப் பண்ணைகளையும் மூடிவிட்டு பண்ணைகளின் உரிமையாளர்கள் தமது வீடுகளுக்கு சென்றிருந்த போது கடும் மழையை பயன்படுத்தி இரவு நேரத்தில் குறித்த பண்ணைகளின் முன்பக்கத்தை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கு பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதன பெட்டி தோட்டத்துக்கு பயன்படுத்தப்படுகின்ற பெருமளவிலான பொருட்களை கொள்ளையிட்டு சென்றுள்ளனர். சந்தேகநபர்கள் காத்தான்குடி மற்றும் பாலமுனை பிரதேசங்களில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியாச்சகர் அமல் ஏ எதிரிமாவின் ஆலோசனையின் பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலைய நிலைய பதில் பொறுப்ப திகாரி எஸ். கதிநாயக்கவின் வழிகாட்டலில் குற்றதடு ப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ ரஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி பொருட்களை மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் விஜயம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



காத்தான்குடியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் நேற்றுமுன்தினம் (11) வியாழக்கிழமை மாலை நேரடியாக சென்று பார்வையிட்டார்.

காத்தான்குடி பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சுகதா வித்தியாலயத்துக்கு சென்ற மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பாடசாலையை முழுமையாக பார்வையிட்டதுடன் பாடசாலையில் தேங்கி இருக்கின்ற வெள்ளநீரை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதன்போது தோணா கால்வாய் மற்றும் வெள்ளை ஏறிய சில வீடுகளையும் அரசாங்க அதிபர் பார்வையிட்டதுடன் காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய ஸ்ரீதர் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான முபீன் மற்றும் பரீத் உட்பட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகள் ஆகியோரும் வருகை தந்தனர்.

## கி.ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இந்திய அமைச்சர் அமோக வரவேற்பு



இந்தியாவின் தமிழக அரசினால் நடத்தப்படும் 'அயலகத் தமிழர் தினம் 2024' விழாவில் சிறப்புரை ஆற்றுவதற்காக, தமிழக அரசினால் விடுக்கப்பட்ட அழைப்பை யேற்று இந்தியா சென்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தானினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 11,12 ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், டுபாய், இலண்டன், கனடா, மொரிசியஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், இந்தியா சென்றடைந்த கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரை, தமிழக அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் நேரடியாகச் சென்று வரவேற்றார்.

இந்நிலையில், 'அயலகத் தமிழர் தினம் 2024' விழாவில், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான்

## தைப்பொங்கலை முன்னிட்டு மூதூரில் இரவில் வர்த்தக நிலையங்கள் திறப்பு !

(மூதூர் தினகரன் நிருபர்)

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்றும் நாளையும் இரவு 11 மணி வரை மூதூரிலுள்ள வர்த்தக நிலையங்களை முழுமையாக திறக்கவுள்ளதாக மூதூர் வர்த்தக சங்க உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும் பல்வேறு தூர கஷ்டப் பிரதேசங்களிலிருந்து மூதூர் நகர வர்த்தக நிலையங்களுக்கு வருகை தரும் மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நலன்கருதியும், தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டும் அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக்கப்படவுள்ளன.



மூதூர் அனர்த்த சமூக சேவைகள் நலன்புரிச்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு விழாவில் தோப்பூர் பிரதேசத்திலிருந்து இம்முறை அதிபர் சேவைக்குத்தெரிவான. எம்.எம்.நௌபீக் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரால் நினைவுச் சின்னம் வழங்கிப் பாராட்டப்பட்டார். இதுதொடர்பான நிகழ்வு சமீபத்தில் மூதூர் பேள் கிரேண்ட் ஹோட்டலில் திடீர் மரண விசாரணைஅதிகாரி முகமட் யூசூப் லாபீர் தலைமையில் நடைபெற்றது. (படம் ;தோப்பூர் தினகரன் நிருபர்)

## கல்முனை பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம்





(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி தேவைகள் தொடர்பாக கல்முனை பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு மற்றும் வெள்ள அனர்த்த அவசரகால ஆயத்தக் கூட்டம் நேற்று (12) கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

உயர்மட்டக் கூட்டத்தில் வெள்ள அனர்த்தம் கூடுதலாக ஏற்படுமாகவிருந்தால் அதற்குரிய உடனடி நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றியும், நிவாரண ஏற்பாடுகள் பற்றியும், தற்காலிக இடைத்தங்கல் முகாம்கள் அமைப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.



இக்கூட்டத்திற்கு கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப். ரகுமான்,டாக்டர் ஏ.எல்.எம்.பாரூக், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலீஹ்,கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எச். ஜனூபா, நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள்,மாநகர சபை அதிகாரிகள், கடற்படை அதிகாரி, சுகாதார துறை அதிகாரிகள், கல்வித்துறை அதிகாரிகள், கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை பிரதேச பள்ளிவாசல்களின் தலைவர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் என பல்வேறுபட்ட திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## 'அவரி' சஞ்சிகை வெளியீடு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண் ஆளுமையின் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப்பின் (srilanka pen club) 8ஆவது "அவரி"சஞ்சிகை வெளியீடு சாய்ந்தமருது றியாழுல் ஜென்னா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. கழகத்தின் தலைவி மஷூறா சுஹூர்டீன் ஆசிரியையின் வழிகாட்டலில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வுக்கு அமைப்பின் இணைச் செயலாளர் முப்லிஹா பிர்தவ்ஸ் ஆசிரியை தலைமை தாங்கினார்.

பன்னூல்ஆசிரியரும்,நாவலாசிரியரும்,ஓய்வு பெற்ற தபால் அதிபருமான தீரன் ஆர். எம். நவ்ஷாத் அவர்கள் நூல் அறிமுகம் செய்தார். இதில் pen club இன் போஷகரும் மாவட்ட கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எல். தௌபீக்,பென்கிளபின் அங்கத்தவர்களும்,விசேட பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## தென் கிழக்காசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் பொ/முஸ்லிம் தேசிய பாடசாலை மாணவி சாதனை

(கிண்ணியா தினகரன் நிருபர்)



பொலன்னறுவை முஸ்லிம் தேசிய பாடசாலையில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவி மொஹமட் நபீல் இல்மா ஸைனப் 2023 இல் இடம் பெற்ற தென் கிழக்காசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். அதேவேளை, சிங்கப்பூரில் நடைபெறும் போட்டியிலும் இலங்கை சார்பாக 20/01/2024 இல் கலந்து கொள்ளவுள்ளார்.

இவர் கணித ஆசான் KLM. நபீல் மற்றும் ஆசிரியை YLF. சுக்றியா ஆகியோரின் மூத்த புதல்வியுமாவார்.

இம்மாணவி பொலன்னறுவை முஸ்லிம் தேசிய பாடசாலையிலிருந்து சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு செல்லும் முதல் மாணவி என்ற பெருமையுடன் வரலாற்றில் தடம் பதித்துள்ளமை சிறப்பம்சமாகும்.

## முதலைகள் நடமாட்டம் அதிகரிப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு ஆரையம்பதி சிகரம் கிராமத்துக்குள் இரவு முதலையொன்று உட்புகுந்ததால் கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

காத்தான்குடி பொலிஸ் நிலையம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முதலையை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.




# பிரித்தானிய இளவரசி Anne, இலங்கைக்கான அரச விஜயத்தில் முதலாவதாக MAS ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு விஜயம்

பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு இராஜதந்திர உறவுகளின் 75 வருட பூர்த்தியை முன்னிட்டு, பிரித்தானியாவின் இளவரசி Anne உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளார். இந்த விஜயத்தின் போது,இளவரசி Anne, அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமதி லோரன்ஸ் மற்றும் அரச தூதுக்குழு மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மேதகு அன்ட்ரூ பேட்ரிக் ஆகியோர், கட்டுநாயக்கவில் உள்ள MAS ACTIVE தயாரிப்பு உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு மையம் MAS Nirmaanaவிற்கு விஜயம் செய்தனர். அங்கு அவருக்கு மிகுந்த வரவேற்பு வழங்கப்பட்டது. MAS Holdings இலங்கையின் மிகப்பெரிய ஆடை ஏற்றுமதியாளர் மற்றும் நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வேலை வழங்கும் நிறுவனமாகும்.



MAS Nirmaanaவில் அவர்கள் நிறுவனத்தின் ஆடை நிபுணத்துவம் மற்றும் கண்டுபிடிப்பு திறன்களைக் காணும் வாய்ப்பைப் பெற்றனர். MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ மற்றும் MAS Active இன் பிரதம நிறைவேற்று அதிகாரி முடித பெர்டினாண்டோ ஆகியோர் இந்த கண்காணிப்புச் சுற்றுப்பயணத்திற்கு இராஜரீகமான பிரதிநிதிகளுடன் ஒன்றிணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய சிந்தனைகளை ஆராய்வது முதல் டிஜிட்டல் தயாரிப்புகளை உருவாக்குவது வரை அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் திறன்களைக் கொண்ட உலகளாவிய ஆடை உற்பத்தி மையமான Nirmaanaவிற்கு பிரித்தானிய இளவரசி மற்றும் சேர் திமதி லோரன்ஸ் ஆகியோர் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். MAS Nirmaana உலகளாவிய ஆடைத் துறையில் முன்னணியில் உள்ளது, இது முன்னோடி படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்புகளின் முன்னணி மையமாக உள்ளது.

MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில், “பிரித்தானிய இளவரசி மற்றும் சேர் திமதி லோரன்ஸ் எங்கள் நிறுவனங்களில் ஒன்றிற்கு வருகை தந்ததில் நாங்கள் உண்மையிலேயே பெருமைப்படுகிறோம். எங்கள் 36 வருட ஆடைத் தொழிலில், எங்களின் முக்கிய சந்தைகளில் ஒன்றாக இங்கிலாந்து முக்கியப் பங்காற்றியுள்ளது. இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க உறவைக் கொண்டாடும் இந்த சந்தர்ப்பத்தில், இவ்விரு நாடுகளுக்கிடையிலான நட்பு MAS க்கு சமமான முக்கியமான சந்தர்ப்பமாகும்.” என தெரிவித்தார்.

# இலங்கையில் சிறுநீரகக் கல் சிகிச்சைக்கான வசதியை மேம்படுத்தும் Hayleys Lifesciences

நாட்டிலுள்ள அதிநவீன பகுப்பாய்வு, அறுவை சிகிச்சை, கதிரியக்க உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்களின் முன்னணி விநியோகஸ்தரான Hayleys Lifesciences (Pvt) Ltd நிறுவனம், சிறுநீரகக் கல் சிகிச்சைக்கான (urological stone treatment) அணுகலை மேம்படுத்துவதற்காக அதிநவீன Dornier Medilas H140 ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. நாட்டில் சிறுநீரக நோயாளிகள் அதிக அளவில் காணப்படுகின்றதும், அதற்கான மேம்பட்ட சிகிச்சை வசதிகள் பற்றாக்குறை உள்ள வேளையிலும் ஏற்பட்டுள்ள சமூக தேவையை இந்த தொழில்நுட்பம் நிவர்த்தி செய்கிறது.




Dornier MedTech நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட Medilas H140 இயந்திரம், ஒரு அதிநவீன Holmium: YAG Laser ஆகும். இது சிறுநீரகக் கல் பிரச்சினை கொண்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில், துல்லியத் தன்மையையும் பாதுகாப்பு அம்சத்தையும் ஒருங்கிணைப்பதன் மூலம், இலங்கையில் சிறுநீரகக் கல் சிகிச்சைக்கான புதிய தரநிலையை அமைக்கிறது. தற்போதைய சந்தையில் காணப்படும் அதிக ஆற்றல் கொண்ட ஒரு Holmium: YAG Laser ஆக இது காணப்படுகின்றது. ஒரே சாதனத்தில் லேசர் மற்றும் morcellator ஆகியவற்றை திறனாக இணைப்பதன் மூலம், இந்த இயந்திரம் பாதுகாப்பாகவும் வேகமாகவும் சிறுநீரகக் கற்களை அகற்றுகிறது.

Dornier Medilas H140 இயந்திரமானது அநுராதபுரம் மற்றும் களுத்துறை போதனா வைத்தியசாலைகளில் காணப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட, Hayleys Lifesciences பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் அத்துல விஜயானந்த "நாட்டின் சுகாதாரத் துறையை சிறந்து விளங்கச் செய்வதே எமது தூரநோக்கமாகும். Medilas H140 இயந்திரமானது, இலங்கையில் சிறுநீரகக் கல் நோயாளிகள் தங்களது சிகிச்சைக்கான அணுகலை கணிசமாக மேம்படுத்துகிறது. இதன் மூலம் மிக அவசியமான சமூகத் தேவையை நிவர்த்தி செய்யப்படுகிறது. இந்த தொழில்நுட்பமானது, நோயாளிகளுக்கு தனித்துவமான, துல்லியமான, பாதுகாப்பான மற்றும் வழக்கமான shockwave (அதிர்ச்சி அலை) சிகிச்சைக்கு மாற்றாக சிறிய துளை மூலமான சிகிச்சையை வழங்குகிறது.” என்றார்.

# யூனியன் வங்கி பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக தில்ஷான் ரொட்ரிகோ

யூனியன் வங்கியின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக தில்ஷான் ரொட்ரிகோ நியமிக்கப்பட்டுள்ளதாக யூனியன் வங்கி அறிவித்துள்ளது. 2024 ஜனவரி 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வங்கியியல் துறையில் இரு தசாப்த காலங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டிருக்கும் டில்ஷான் ரொட்ரிகோ முன்னர் ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர்/பிரதம செயற்பாட்டு அதிகாரி எனும் பதவியை இவர் வகித்திருந்தார். அதன் போது மத்தியசெயலாக்கம், தன்னியக்கமயமாக்கம், வெளியாள் சேவை மற்றும் பயிற்சிகளினூடாக வினைத்திறன்களை அங்கிகரித்தல் மற்றும் சிக்கன முறையில் தெரிவுகளை அறிமுகப்படுத்தல் போன்றவற்றை இவர் மேற்கொண்டிருந்தார்.



வங்கியியல், காப்புறுதி, முதலீட்டு வங்கியியல் மற்றும் ஆடைத் தொழிற்துறை போன்ற பல்வேறு துறைகளில் பல சிரேஷ்ட நிலைகளை ரொட்ரிகோ வகித்திருந்தார். இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் பணிப்பாளராக இவர் தற்போது செயலாற்றுகின்றார். HNB ஃபினான்ஸ் பிஎல்சி மற்றும் லங்கா ஃபினான்ஷியல் சேர்விசஸ் பியுரோ ஆகியவற்றின் தவிசாளராக செயலாற்றியுள்ளார். HNB அஷ்யூரன்ஸ் பிஎல்சி மற்றும் கார்டியன் அக்குவிட்டி மனேஜ்மன்ட் லிமிடெட் ஆகியன அடங்கலாக பல முன்னணி கூட்டாண்மை நிறுவனங்களில் பல பணிப்பாளர் நிலைகளை வகித்துள்ளார்.

தற்போது இலங்கை பணிப்பாளர் நிறுவகத்தின் (SLID) சம்மேளனங்களில் ரொட்ரிகோ அங்கம் வகிப்பதுடன், 2011/12 மற்றும் 2019/20 காலப்பகுதிகளில் ஆசிய வங்கியாளர் சம்மேளனம் (தாய்வான்) கொள்கை ஆலோசனை செயற்குழுவின் தவிசாளராகவும் பணியாற்றியுள்ளார். CIMA, ACCA மற்றும் இடர் நிபுணத்துவ அமர்வு ஆகியவற்றிலும் இவர் அங்கம் வகித்திருந்ததுடன், இரு தவணைகள் ACCA மற்றும் இடர் நிபுணத்துவ அமர்வின் தலைவராகவும் இயங்கியுள்ளார். ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக, பல்வேறு பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு (CIMA, ACCA, PIM MBA) போன்றவற்றுக்கு விரிவுரையாளராக செயற்பட்டுள்ளார். Cranfield University UK, FCMA UK மற்றும் FCCA UK இன் முதுமானிப் பட்டத்தையும் ரொட்ரிகோ பெற்றுள்ளார்.

# 2024 இல் புதிய தொழில்நுட்பங்களை அனுபவிக்க அழைப்பு விடுக்கும் Samsung Sri Lanka

2023 ஆம் ஆண்டு நிறைவடை இத்தறுவாயில், Samsung Electronics ஆனது இல்லங்களுக்கான மின்னணு சாதனங்களின் ஜாம்பவானாகத் திகழ்கின்றது. அதன் தொழிற்பாடு, நயப்பாங்குப் பாணி மற்றும் பாவனையாளர் நட்பு என்பன தடையின்றி இணைக்கும் உயர் மதிப்பு தயாரிப்புகளுக்கு ஏற்றவிதமாக, Samsung ஆனது நுகர்வோரை, ஆரம்பித்திருக்கும் இப்புதிய ஆண்டில் தன்னோடு கைகோர்த்துக் கொண்டு சிறந்த பயணத்தினைத் தொடங்க அழைக்கின்றது.

உலகின் முன்னணி Brand களின் மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance ஆனது, இலங்கையில் மிகவும் விரும்பப்படும் இல்லத்து உபகரணங்களின் Brand ஆக Samsung ஆனது தனது நிலையினை உறுதிப்படுத்தியிருப்பதன் இரகசியம் என்னவெனில், தனிச்சிறப்பு வாய்ந்த அனுபவங்களினை அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருவதும், மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான அதன் தொடர்ச்சியான உறுதியான அர்ப்பணிப்புமே என்பதனை நிரூபித்துக் காட்டியுள்ளது எனத் திடமாகக் கூறியுள்ளது. ஆம்.. ஆம் வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், தொடர்ந்தும் புத்தாக்கங்களினைப் படைப்பதன் மூலமும் இல்லங்களுக்கான மின்னணு சந்தையில் தனது முதன்மை நிலையினைத் தக்க வைத்துக் கொள்ளும் Samsung இன் உறுதிப்பாட்டினை, இம் மதிப்புமிக்க அங்கீகாரம் ஆனது உறுதிப்படுத்தியுள்ளது.

படத்தின் தரம் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றின் எல்லைகளைத் தொடர்ந்தும் விரிவுபடுத்திக் கொண்டு வரும் Samsung ஆனது, தனது மிகப் பிந்திய புத்தம்புதிய தொழில்நுட்பங்களைக் கொண்ட தயாரிப்புகளினை அறிமுகப்படுத்தி வருகின்றது.

# தமது அட்டைதாரர்களை தாமரை கோபுர உணவகத்திற்கு வரவேற்கும் ComBank & UnionPay

கொமர்ஷல் வங்கியின் யூனியன் பே அட்டைதாரர்களுக்கு கொழும்பு தாமரை கோபுரத்தில் உள்ள சுழலும் உணவகத்தில் ஒரு பிரத்தியேகமான புதிய விருந்து அனுபவம்.

இந்த சிறப்பு வெகுமதியானது, முன்னணி உலகளாவிய அட்டை கட்டண வலையமைப்பான UnionPay இன் கிரெடிட் மற்றும் டெபிட் கார்டு வைத்திருப்பவர்களுக்கான வங்கியின் பிரசார வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் குறைந்தபட்சம் மாதத்திற்கு ரூபாய் 50,000 செலவழிக்கும் எந்தவொரு ComBank UnionPay அட்டைதாரரும் இந்த பிரத்தியேக வெகுமதிக்குத் தகுதியானவர்களில் ஒருவராக இருப்பார், இது "விருந்து மற்றும் நுட்பத்தின் உச்சம்" என்று வங்கியால் விபரிக்கப்பட்டுள்ளது. மூன்று மாத ஊக்குவிப்பு முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அட்டைதாரர்கள் மற்றும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களுக்கு மறக்க முடியாத அனுபவத்தை இந்த நிகழ்வு உறுதியளிக்கிறது என்று வங்கி தெரிவித்துள்ளது.



கொமர்ஷல் வங்கியின் அட்டை மையத்தின் தலைவர் திரு நிஷாந்த டி சில்வா கூறுகையில், "இந்த அட்டைதாரர்களின் சுயவிபரத்துடன் ஒத்துப்போகும் இந்த வகையிலான ஊக்குவிப்புகளை நடத்த UnionPay உடன் கைகோர்த்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். "இலங்கையில் யூனியன் பே கார்ட்களை முதன்முதலில் வழங்குபவரான கொமர்ஷல் வங்கி மற்றும் யூனியன் பே ஆகியவை ஒரு சிறந்த உறவைக் கொண்டிருப்பதுடன் சந்தையில் பல முதன்மைகளை ஒன்றாகச் சேர்ந்து செய்துள்ளன."

UnionPay இன்டர்நேஷனல் தெற்காசியாவின் பணிப்பாளர் திரு Hu Binghan மேலும் கூறியதாவது: “Pointofsale Terminal மற்றும் QR code கட்டணத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் இலங்கையில் எங்கள் அட்டைகளைப் பயன்படுத்துவதை எளிதாக்கும் கொமர்ஷல் வங்கியின் முயற்சிகளுடன், அட்டை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையில் நல்ல வளர்ச்சியை நாங்கள் கண்டுள்ளோம். அத்தோடு அட்டைதாரர்களுக்கான இந்த ஊக்குவிப்பு சரியான நேரத்தில் அமைந்துள்ளது.

# விரிவுபடுத்திய யட்டிநுவர காட்சியறையை திறந்து வைத்துள்ள ஸ்ரீயானி ட்ரெஸ் பொயின்ட்

ஸ்ரீயானி ட்ரெஸ் பொயின்ட் (Sriyani Dress Point) யட்டிநுவர கிளையானது, கண்டி நகரத்தில் அதன் சொந்த அடையாளமான காட்சியறையை விரிவாக்கம் செய்து, பெருமையுடன் மீண்டும் திறந்து வைத்துள்ளது. தனது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நம்பகமான மற்றும் சிறந்த சேவையை வழங்குவதற்காக நவீனமயமாக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ள இந்த காட்சியறையானது, ஒப்பிட முடியாத கொள்வனவு அனுபவத்தை வழங்குகிறது. இது, புதிதாக சேர்க்கப்பட்ட புதிய இரண்டு தளங்களுடன், ஒப்பிட முடியாத தள்ளுபடிகள் மற்றும் தனித்துவமான பேஷன் ஆடை வகைகள் உள்ளிட்ட பெரும் ஆடைத் தெரிவு வகைகளை கொண்டுள்ளது.



1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீயானி ட்ரெஸ் பொயின்ட், கேகாலை, குருணாகல், மாத்தளை, நீர்கொழும்பு, இரத்தினபுரி மற்றும் மலையகத்தின் மையப்பகுதியான கண்டி நகரில் காணப்படும் அதிக கேள்வியை ஈடுசெய்யும் வகையில் இரண்டு காட்சியறைகள் உள்ளிட்ட நாடு முழுவதிலும் உள்ள காட்சியறைகள் அனைத்தும் தினமும் திறக்கப்படுவதன் மூலம், இலங்கையின் முன்னணி ஆடை வணிக வலையமைப்புகளில் ஒன்றாக மாறியுள்ளது.

அதன் யட்டிநுவர காட்சியறையானது, இலக்கம் 41, யட்டிநுவர வீதி, கண்டி எனும் முகவரியில் அமைந்துள்ளது.

# இலங்கை இலக்கிய மற்றும் கலை விழாவை ஆரம்பித்து வைத்த HSBC

**★இலங்கையின் இலக்கியம், கலைகள் மற்றும் கலாசார வளங்களுக்கு தலை வணங்குகிறோம்**

**★முதலாவது நிகழ்வு கண்டி மற்றும் கொழும்பில் நடத்தப்படவுள்ளது**

இலங்கையின் கண்டி மற்றும் கொழும்பு ஆகிய வரலாற்று, பாரம்பரியமிக்க நகரங்களில் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இலங்கை இலக்கிய மற்றும் கலை விழாவை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.



கடந்த கால வரலாற்றைக் கொண்ட தீவான இலங்கை, தொடர்ச்சியாக முகம் கொடுத்த பல்வேறு சவால்களில் இருந்து படிப்படியாக மீண்டு வருகிறது. இந்த விழா நாட்டின் இலக்கியம் மற்றும் படைப்புத் துறைகளை மாற்றியமைத்து உயர்த்துவதற்கான ஒரு படியாகும். நாட்டின் வளமான கலாசார ஐதீகம், அழகிய நிலத்தோற்றங்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதுடன் சுற்றுலாப் பயணிகள், முதலீட்டாளர்கள் மற்றும் புதிய பங்காளிகளுக்கு இலங்கையினை முதன்மையான இடமாக நிறுவுவதுமே இதன் நோக்கமாகும்.

“எமது பங்காண்மை மூலம், நடக்கவிருக்கும் இலங்கை இலக்கியம் மற்றும் கலை விழாவில் எமது வாடிக்கையாளர்களுக்கு இலக்கியம், கலை மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் "உலகின் சிறந்ததை" கொண்டு சேர்ப்பதே எமதுஅபிலாஷையாகும். இதன் மூலம் இலங்கையின் முன்னணி சர்வதேச வங்கி என்ற வகையில், புகழ்பெற்ற சர்வதேச மற்றும் உள்நாட்டு எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினருடன் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

இந்த விழாவில், இலங்கையில் உள்ள உள்நாட்டு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் சிறந்த பணியினை வெளிப்படுத்துவதன் மூலம், "இலங்கையின் சிறந்ததை" உலகிற்கு காட்சிப்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று HSBCயின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் சேர்ஜினர் தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த மற்றும் சர்வதேச எழுத்தாளர்கள், கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் பிற ஆக்கப்பூர்வ நிபுணர்களின் பரந்த அளவிலான திறமைகளை வெளிப்படுத்துவது இந்த விழாவின் இலக்காக உள்ளது. விழாவின் பிரதம கண்காணிப்பாளரும், புகழ்பெற்ற எழுத்தாளருமான அசோக் ஃபெர்ரி, தனது சர்வதேச அங்கீகாரத்துடன் இணைந்து இலங்கை இலக்கியம் மற்றும் கலாசாரம் பற்றிய விரிவான அறிவுடன் விழாவின் இலக்கிய விளக்கக்காட்சிகளை மேற்பார்வையிடவுள்ளார்.

# இணையவழி கணக்கு ஆரம்ப நடைமுறைக்கு Best Banking Process விருது பெற்ற DFCC வங்கி

DFCC வங்கி, அதனது eKYC (electronicknowyourcustomer இலத்திரனியல் முறையில் உங்களது வாடிக்கையாளர் விபரங்களை அறிந்துகொள்ளுதல்) தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தியமைக்காக, Global Banking and Finance Review இல் Best Banking Process என்ற மதிப்புமிக்க விருதை அண்மையில் சம்பாதித்துள்ளது. இந்த விருதானது, குறிப்பாக eKYC இல் டிஜிட்டல் புத்தாக்கம், பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறன் ஆகியவற்றில் வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காண்பிக்கின்றது. இந்த முறைமையானது தங்குதடையின்றியும், பாதுகாப்பாகவும் 100% டிஜிட்டல்ரீதியாக வாடிக்கையாளர்களை புதிதாக உள்வாங்கும் வசதிக்கு வழிகோலியுள்ளதுடன், வாடிக்கையாளர்கள் கணக்கினை ஆரம்பிப்பதற்கு கிளைக்கு வருகை தர வேண்டிய சிரமங்களையும் போக்குகின்றது. இது தலைசிறந்த டிஜிட்டல் வழி சேவை மற்றும் வழங்கலுக்கு வித்திட்டுள்ளது.



புதிய வாடிக்கையாளர்களை உள்வாங்கும் போதும், ஏற்கனவே வாடிக்கையாளர்களாக உள்ளவர்களின் விபரங்களை சரிபார்க்கும் போதும் அவர்களின் தகவல் விபரங்களை விரைவாகவும், தங்குதடையின்றியும் மற்றும் துல்லியமாகவும் டிஜிட்டல்ரீதியாக சரிபார்ப்பதற்கு மேம்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பங்களை DFCC வங்கி கைக்கொண்டுள்ளமையை அங்கீகரிக்கும் வகையில் இந்த மதிப்பிற்குரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

## யாழில்.

# திண்மக்கழிவகற்றும் பவுசர்களை ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தின் ஊடாக கண்காணிக்க நடவடிக்கை

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணத்தில், கழிவுகள் மற்றும் மலக்கழிவகற்றும் பவுசர்களை ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தினூடாக கண்காணிக்குமாறு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில், கழிவுகள் மற்றும் மலக்கழிவுகள் உரியவாறு அப்புறப்படுத்தப்படாமையால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் போதே ஆளுநர் அவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனங்களின் ஊடாக மலக்கழிவகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது.

அவ்வாறு அகற்றி செல்லும் போது, பவுசர்களில் நிரப்பிச் செல்லப்படும் மலக்கழிவை உரியவாறு அப்புறப்படுத்துவதில்லை. ஒரு சில பகுதிகளில் பொதுமக்கள் குடியிருப்புகளுக்கு அண்மையில் இவை கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயங்களை கேட்டறிந்து கொண்ட ஆளுநர் பின்வரும் நடவடிக்கைகளை அமுல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மலக்கழிவகற்றும் பவுசர்களை ஜீ.பி.எஸ். தொழினுட்பத்தினூடாக கண்காணித்தல்.

மலக்கழிவகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும் மாகாண சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் பவுசர்களில், நிறுவனத்தின் பெயர், பதிவு விபரங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

இவர்களுக்கான ஒழுங்கு விதிகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் அறிவிக்க வேண்டும்.

குறித்த பவுசர்களை போக்குவரத்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கண்காணிக்க வேண்டும். என பணித்தார்.

இந்த கூட்டத்தில் உள்ளூராட்சி மன்ற திணைக்கள ஆணையாளர், யாழ்.மாநகர சபை ஆணையாளர், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இந்திய இழுவைப் படகுகளால்

# மீன்பிடி நடவடிக்கைகள் பாதிப்பு

(நாகர்கோவில் விசேட நிருபர்)

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் எல்லை தாண்டி வந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் வடமராட்சி இன்பசிட்டி, சுப்பர்மடம், சக்கோட்டை மீனவர்களின் சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் சேதமடைந்துள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை (11) நள்ளிரவு வேளையில் நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் இலங்கை எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்ததாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கடற்பரப்பில் கரையிலிருந்து மூன்று கடல் மைல் தூரத்தில் இந்திய இழுவைப்படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இதன்போது பத்து மீனவர்களின் வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளமையால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# வடக்கின் உதயம்

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நால்வர் கைது

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவந்த நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் உள்ளிட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 19 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

திருநெல்வேலி சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மறைமுகமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், தனக்கு கசிப்பை உற்பத்தி செய்து விநியோகிப்பவர்கள் கோப்பாய் பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் அவர்களிடம் வாங்கியே தான் விற்பனை செய்துவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் மத்தி பகுதியிலுள்ள வீடொன்றை பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்திய போது, வீட்டிலிருந்து 19 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், வீட்டிலிருந்த பெண் உள்ளிட்ட நால்வரையும் கைது செய்தனர் .

கைது செய்யப்பட்ட ஐவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ். மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்.விசேட நிருபர்



யாழ்ப்பாணம் மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது தாக்குதல் நடாத்திய குற்றச்சாட்டில் கைதான இருவர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மண்டைதீவு சந்தியில் அமைந்துள்ள ஊர்காவற்றுறை பொலிஸாரின் காவலரண் மீது கடந்த புதன் கிழமை இரவு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆஜர்படுத்தினர்.

இதன்போது, போதைப்பொருளுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வுக்கு அனுப்பிய சம்பவத்திற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவும் ஏற்கனவே பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டு இருந்ததாகவும், இதன் பின்னணியில் "புலிக்குட்டி" என்பவரின் குழு செயற்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட இருவரும் "புலிக்குட்டி" குழுவை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி, கைது செய்யப்பட்ட இருவரும் அவர்களின் நண்பர் ஒருவரின் பதிவு திருமணத்தை முன்னிட்டு, வீடொன்றில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு இருந்த போதே கைது செய்யப்பட்டனர் எனவும், பொலிஸார் கூறும் புலிக்குட்டி என்பவரை இவர்களுக்கு தெரியாது என மன்றுரைத்தார்.

அதனை தொடர்ந்து இரு சந்தேகநபர்களையும் பிணையில் செல்ல ஊர்கவற்றுறை நீதவான் நீதிமன்றம் அனுமதித்தது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த ஊர்கவற்றுறை பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சம்பவம் தொடர்பில், மேலும் நால்வரை கைது செய்துள்ளனர்.

# முதியவர் சடலமாக மீட்பு

(பருத்திதுறை விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் கோவில் பகுதியில் முதியவரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

விஸ்வநாதப்பிள்ளை யோகேந்திரன் என்ற 62 வயதுடைய முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்தில் (12) சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்டோர் விஜயம் செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளிலும் ஈடுபட்டனர். இச்சம்பவம் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். உயிரிழந்தவரின் மகன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலுக்கமைய சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்திய மீனவர்கள் 12 பேர் நிபந்தனை அடிப்படையில் விடுவிப்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)



இந்திய மீனவர்கள் 12 பேர் நிபந்தனை அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரையால் நேற்று வெள்ளிக்கிழமை (12) விடுவிக்கப்பட்டனர்.

கடந்த டிசம்பர் மாதம் 9ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களுக்கும் எதிரான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் படகின் உரிமையாளர் பிரதான சந்தேகநபராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்.

அதனடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை (12) வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீரியல் வளத்துறையால் மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

மூன்று குற்றச்சாட்டுகளையும் மீனவர்கள் ஏற்றுக்கொண்டமையால் பத்துவருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத்தண்டனை விதித்து பருத்துத்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை தீர்ப்பளித்தார்.

# இரத்தினபுரியில் பாலம் இடிந்து வீழ்ந்து போக்குவரத்து தடை





(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி கஹவத்த திமியாவ பிரதேசத்தில் வட கிராமங்களை இணைக்கும் பாலம் உடைந்து வீழ்ந்தமையால் அப்பிரதேசத்துக்கான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக பாலம் இடிந்து விழுந்துள்ளது.

இதனால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாக காவத்தை பிரதேச செயலக சமூக சேவை அதிகாரி தெரிவித்தார்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் வசிக்கும் இக்கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் அரச ஊழியர்கள், தேயிலை, இறப்பர் தொழில்துறை சார்ந்தோர் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# மலைச்சாரல்

# சமனலவத்த பாலத்தின் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தம்

## பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் சிரமம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை சமனலவத்த வீதிப்பாலத்தின் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. இதனால் பலாங்கொட சமனலவத்த வீதியில் பயணிக்கும் பஸ்களும் சேவையை இடைநிறுத்தியுள்ளது. மேலும் தேயிலைக் கொழுந்து உற்பத்தி கிராமமான சமனலவத்தையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக் கொழுந்தை தொழிலாளர்கள் பல கிலோமீற்றர்கள் தூரம் மூடைகளில் சுமந்து பாலத்தை தாண்டி அவற்றை வாகனங்களில் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கும் கஷ்டமான பணியில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் நீண்ட தூரம் கால்நடையாக சென்று போக்குவரத்து வசதியை பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மூலிகை செடிகள் தட்டுப்பாடு ஆயுர்வேத வைத்தியசாலைகள் பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இலங்கையில் மூலிகை தட்டுப்பாடு காரணமாக சுதேச வைத்திய துறை ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தொழிற்துறை சார்ந்தோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் நாட்டின் கிராமங்கள், நகரங்களில் எலும்பு முறிவு உட்பட விஷ ஜந்துக்களின் பாதிப்புக்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மூலிகை செடிகளின் தட்டுப்பாடு காரணமாக வைத்திய முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட சுதேச ஆயுர் வேத வைத்திய அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# ஆணொருவரின் சடலம் மீட்பு

கினிகத்தேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெனில் தோட்டத்தில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கெனில் தோட்டம் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த 46 வயதுடைய சுப்புன் நாமல் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விறகு சேகரிக்க சென்றவர் வீடு திரும்பாமையால் இதுதொடர்பில் அவரது தந்தை கினிகத்தேன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

அதற்கமைய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார், கெனில் தோட்டம் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த வன பகுதியிலுள்ள ஓடையொன்றிலிருந்து காணாமல் போன நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கினிகத்தேன மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





எட்டியாந்தோட்டை, கல கராகொடை அல்ஹிக்மா குர்ஆன் மதரஸாவின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள் அரநாயக்க செய்தியாளர்)

# 2024 ஐ.பி.எல். போட்டிகளை இலங்கையில் நடத்த முயற்சி



இந்திய பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரின் சில போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளரிடம் தாம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை ஒன்றை விடுத்ததாக விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இம்முறை ஐ.பி.எல். போட்டி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

"இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷாவுடன் நான் அண்மையில் திடீர் சந்திப்பு ஒன்றை நடத்தினேன். அப்போது இராஜதந்திர நிலைமை குறித்து பேசப்பட்டது. எதிர்வரும் ஐ.பி.எல் தொடரின் மூன்று போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கு நான் ஆலோசனை முன்வைத்தேன். இந்தப் போட்டிகளை இலங்கையில் நடத்த வாய்ப்புக் கிடைத்தால் அது முக்கிய வெற்றியாக அமையும்" என்று அமைச்சர் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

தென்னிந்தியாவிலும் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் மத்தளையை ஐ.பி.எல். வலயமாக மாற்ற வாய்ப்பு உள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் பொதுத் தேர்தல் காரணமாக இதற்கு முன்னர் இரு முறை ஐ.பி.எல். போட்டிகள் வெளிநாட்டுக்கு மாற்றப்பட்டிருந்தன. 2009 தொடர் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டதோடு 2014 இல் தொடரின் முதல்கட்டப் போட்டிகள் மத்திய கிழக்கில் ஆடப்பட்டன.

நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடர் வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்தத் தொடருடன் பாராளுமன்ற தேர்தலும் நடைபெற இருப்பதால் போட்டிகளுக்கு பாதுகாப்பு வழங்குவது கேள்விக்குறியாகும் நிலையில் உள்ளது. இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷா ஆலோசனை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து இலகு வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் நியூசிலாந்து அணி 46 ஓட்டங்களால் இலகு வெற்றியீட்டியது.

ஒக்லாந்தில் நேற்று (12) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நியூசிலாந்து அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 226 ஓட்டங்களை விளாசியது.

டெரில் மிச்சர் 27 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்களை விளாசியதோடு அணித் தலைவர் கேன் வில்லியம்சன் 42 பந்துகளில் 9 பௌண்டரிகளுடன் 57 ஓட்டங்களை பெற்றார்.

இதன்போது ஷஹீன்ஷா அப்ரிடி 3 விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் அவர் தனது 4 ஓவர்களுக்கும் 46 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். அப்பாஸ் அப்ரிடியும் 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான் அணி வெற்றி இலக்கை வேகமாக துரத்தி ஆடிய போதும் முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி 18 ஓவர்களில் 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய பாபர் அஸாம் 35 பந்துகளில் 6 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களை பெற்றார். டிம் சௌதி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த வெற்றியுடன் ஐந்து போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் நியூசிலாந்து அணி 1–0 என முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டி20 போட்டி நாளை ஹமில்டனில் நடைபெறவுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## மாலைதீவு – இந்திய முறுகல் தொடர்கிறது



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை கேலி செய்யும் வகையில் சமூக ஊடகங்களில் அறிக்கைகளைப் பதிவிட்ட மூன்று அமைச்சர்களை மாலைதீவு அரசாங்கம் இடைநிறுத்திய சம்பவத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகல் நீடித்து வருகிறது.

அமைச்சர்களான மல்ஷா ஷெரிப், மரியம் ஷியூனா, அப்துல்லா மஹ்சூம் மஜிட் ஆகிய மூவருமே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டனர்.

இந்திய பிரதமர் லட்சதீவுக்கு விஜயம் மேற்கொண்டமை குறித்து கேலி செய்யும் வகையில் அறிக்கை வெளியிட்டமையின் அடிப்படையில் இவர்களை மாலைதீவு இடைநிறுத்தியது.

அமைச்சர் மரியம் ஷியூனா உள்ளிட்டவர்கள் இந்திய பிரதமர் லட்சதீவுக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து தெரிவித்துள்ள கருத்துக்கள் அரசின் கருத்துக்களை பிரதிபலிப்பவை அல்ல என்று குறிப்பிட்டுள்ள மாலைதீவு அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுள்ளது.

இதேவேளை மாலைதீவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதி சபாநாயகருமான ஈவா அப்துல்லா, பிரதமர் மோடிக்கு எதிராக எம்.பிக்களில் ஒரு பிரிவினர் தரக்குறைவான கருத்துகளைத் தெரிவித்துள்ளதால் அரசாங்கம் இந்திய மக்களிடம் முறைப்படி மன்னிப்பு கேட்க வேண்டும் என்றுள்ளார்.

## யெமன் ஹூத்திக்கள் மீது அமெ., பிரிட்டன் தாக்குதல்

### செங்கடலில் பதற்றம் அதிகரிப்பு



செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தி வரும் யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் வான் மற்றும் கடல் வழியாக தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து யெமனின் பல பகுதிகளிலும் வெடிப்புகள் இடம்பெற்றதை ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது. தேவை ஏற்பட்டால் மேலும் நடவடிக்கை எடுக்கத் தயங்கப்போவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

ஹூத்திக்களுக்கு ஆதரவு அளித்து வரும் ஈரான் இந்தத் தாக்குதலை கடுமையாகக் கண்டித்துள்ளது. மறுபுறம் இஸ்ரேலை நோக்கிச் செல்லும் கப்பல்கள் தொடர்ந்து இலக்கு வைக்கப்படும் என்று ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் குறித்து பேசுவதற்கு உடன் பாதுகாப்புச் சபையை கூட்டும்படி ரஷ்யா கோரியுள்ளது.

காசா மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவே செங்கடலில் செல்லும் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்துவதாக ஹூத்திக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது மருத்துவனையில் சிகிச்சை பெற்றுவரும் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டின் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், ஆளில்லா விமானங்கள், பளிஸ்டிக் மற்றும் க்ரூஸ் ஏவுகணைகள், ராடார் மற்றும் வான் கண்காணிப்பகம் ஆகிய ஹூத்திக்களின் திறன்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

தலைநகர் சனாவுடன் சாதா மற்றும் தார், அதேபோன்று ஹுதைதா நிர்வாகப் பகுதிகளில் தாக்குதல்கள் இடம்பெற்றதாக ஹூத்தி அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தாக்குதலை "அமெரிக்க – சியோனிச – பிரிட்டன் ஆக்கிரமிப்பு" என்று வர்ணித்துள்ளார்.

## அமேசனில் பண்டைய நகரம் கண்டுபிடிப்பு



செழிப்பான தாவரங்களுக்கு மத்தியில் பல்லாயிரம் ஆண்டுகளாக மறைந்திருந்த பண்டைய பாரிய நகர் ஒன்று அமேசன் காட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்டுபிடிப்பு அமேசனில் வாழ்ந்த மக்கள் பற்றிய வரலாற்று புரிதலை மாற்றக்கூடியது என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வியக்கத்தக்க வகையிலான வீதிகள் மற்றும் கால்வாய் வலையமைப்பு மூலம் இணைக்கப்பட்டு வீடுகள் மற்றும் சந்தைத் தொகுதிகளைக் கொண்ட இந்த பண்டைய நகர் கிழக்கு ஈக்வடோரின் உபானா பகுதியில் அமைந்துள்ளது.

எரிமலை ஒன்றுக்குக் கீழ் அமைந்திருக்கும் இந்தப் பகுதி வளமான மண்ணை கொண்டிருந்தபோதும் அந்த எரிமலையே பண்டைய நகரின் அழிவுக்குக் காரணமாகி இருக்காலம் என்று நம்பப்படுகிறது.

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டிருக்கும் இந்த நகரில் 1,000 ஆண்டுகள் வரை மக்கள் வாழ்ந்திருப்பதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இனப்படுகொலை குற்றச்சாட்டை எதிர்த்து வாதிட்ட இஸ்ரேல் காசாவில் தொடர்ந்து சரமாரித் தாக்குதல்

ஹேகிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள தன் மீதான இனப்படுகொலை குற்றச்சாட்டை இஸ்ரேல் நேற்று எதிர்த்து வாதிட்ட போதும், காசாவில் அது தொடர்ந்து நடத்தும் தாக்குதல்களில் மேலும் பல பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

1948 ஆம் ஆண்டு கைச்சத்திடப்பட்ட ஐ.நா இனப்படுகொலைக்கு எதிரான சாசனத்தை இஸ்ரேல் மீறி இருப்பதாக தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் (11) ஆரம்பிக்கப்பட்டது.

இதில் காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தக் கோரும்படி நீதிபதிகளை தென்னாபிரிக்கா கேட்டுக்கொண்டது. காசாவை அழிப்பதற்கு இஸ்ரேல் திட்டம் தீட்டி இருப்பதாகவும் முதல் நாள் விசாரணையில் தென்னாபிரிக்கா வாதிட்டது.

தென்னாபிரிக்க உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரான டெப்பேகா நிகுகெய்டோபி ஐ.நா நீதிமன்றத்தில் கூறும்போது, இஸ்ரேல் நடத்தும் இராணுவத் தாக்குதல்களில் இருந்து அதன் இனப்படுகொலை நோக்கத்திற்கான ஆதாரம் உள்ளது என்றார்.

"ஒவ்வொரு நாளும் பலஸ்தீன மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத உயிர், உடைமை, கண்ணியம் மற்றும் மனிதாபிமான இழப்புகள் அதிகரித்து வருகின்றன" என்று தென்னாபிரிக்காவை பிரதிநிதித்துவம் செய்த அதிலா ஹாசிம் நீதிமன்றத்தில் தெரிவித்தார். "இந்த நீதிமன்றத்தின் உத்தரவைத் தவிர இந்த வேதனைகளை நிறுத்த முடியாது" என்றார். "இராணுவ நடவடிக்கைகளை இனப் படுகொலை என்று முன்கூட்டியே அறிவிக்க முடியாதுதான். இருந்தாலும், காசாவில் இஸ்ரேல் கடந்த 13 வாரங்களாக நடத்தி வரும் தாக்குதலின் போக்கு, நோக்கம் ஆகியவற்றை கவனித்தால் அது இன அழிப்பு என்பதை சந்தேகமில்லாமல் புரிந்துகொள்ள முடியும்" என்று அவர் வாதிட்டார்.

இந்த விசாரணையில் ஆதாரங்களை சமர்ப்பித்த தென்னாபிரிக்கா, "இஸ்ரேலின் நடவடிக்கைகள் பலஸ்தீன தேசியம், இன மற்றும் இனக்குழுவின் கணிசமான பகுதியை அழிக்கும் நோக்கம் கொண்டது" என்று கூறியது.



இந்த குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்று குறிப்பிட்ட இஸ்ரேல் நேற்று நீதிமன்றத்தின் முன் தன்பக்க நியாயங்களை வாதிட்டது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் சுமார் 1200 பேர் கொல்லப்பட்டு 250 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட நிலையிலேயே இஸ்ரேல் போர் நடவடிக்கையை ஆரம்பித்து காசா மீது வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

எனினும் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் பேசிய தென்னாபிரிக்க நீதி அமைச்சர் ரொனால்ட் லமோலா, "(இனப்படுகொலை) சாசனத்தை மீறுவதற்கு எந்த தாக்குதலும் நியாயமானது அல்லது தாற்காப்பானது என்று குறிப்பிட முடியாது" என்றார்.

நாஜிக்களில் ஹொலகோஸ்ட் படுகொலையை அடுத்து 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இனப்படுகொலைக்கு எதிரான சாசனத்தில் இஸ்ரேலும் கையெழுத்திட்டுள்ளது.

நெதர்லாந்தின் ஹேகை தளமாகக் கொண்ட இந்த நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் சபையின் உச்ச நீதிமன்றமாகும். இதன் தீர்ப்புகள் சட்டரீதியான கடப்பாடு பெற்றது என்றபோது அதனை செயற்படுத்துவதற்கான நடைமுறை இல்லாதுள்ளது.

2022 இல் இந்த நீதிமன்றம் உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தும்படி ரஷ்யாவுக்கு உத்தரவிட்டபோதும் அது பொருட்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் காசா மீது 98 ஆவது நாளாகவும் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் கணிசமான பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்தனர்.

மத்திய காசாவின் டெயிர் அல் பலாவில் உள்ள குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியதோடு சமகாலத்தில், அல் சவைதா மற்றும் அண்டைய நுஸைரத் மற்றும் அல் புரைஜ் அகதி முகாம்கள் மீது பீரங்கி தாக்குதல்கள் நடத்தியது. இதில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரின் பல இடங்களிலும் இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் தொடர்ந்த நிலையில் அங்குள்ள மருத்துவமனைகளுக்கு 30க்கும் அதிகமான சடலங்கள் வந்துள்ளன.

தவிர, கான் யூனிஸின் மத்திய பகுதியில் காயமடைந்தவர்கள் மற்றும் மீட்கப்பட்ட சடலங்களை எடுத்துச் செல்லும் அம்பூலன்ஸ் வண்டி மற்றும் மீட்புக் குழுவினர் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் உக்கிர தாக்குதல்களை நடத்தி இருப்பதாக வபா செய்தி வெளியிட்டது.

முன்னதாக கடந்த வியாழக்கிழமை இரவு தெற்கு காசாவின் கிழக்கு ரபாவில் உள்ள ஷஹ்கா பகுதியில் குடியிருப்பு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது ஏழு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலின் தாக்குதலுக்கு உள்ளான அபூ செனமா குடும்ப வீட்டில் கொல்லப்பட்ட ஒன்பது உடல்களை மீட்டதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்தது.

இதன்படி காசாவில் இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 23,500ஐ தாண்டியுள்ளது. சுமார் 60,000 பேர் காயமடைந்திருப்பதோடு 8,000 பேர் வரை காணாமல்போயுள்ளனர்.

## காசாவில் தினசரி உயிரிழப்பு 21ஆம் நுற்றாண்டில் அதிகம்



காசாவில் தினசரி சராசரியாக 250 பேர் கொல்லப்படும் நிலையில் அங்கு 21 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற எந்த ஒரு போரை விடவும் தினசரி உயிரிழப்பு அதிகமாக உள்ளதாக பிரிட்டனைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான ஒக்ஸ்பாம் தெரிவித்துள்ளது.

காசா மீது இஸ்ரேல் மூன்று மாதங்களை தாண்டி நடத்தும் தாக்குதல்களில் 23,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட நிலையில் ஒக்ஸ்பாம் நேற்று முன்தினம் (11) வெளியிட்ட அறிவிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் மற்ற மோதல்களில் தினசரி கொல்லப்படுவோர் எண்ணிக்கை ஒப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நாளொன்றுக்கு சராசரியாக சிரியாவில் 96.5, சூடானில் 51.6, ஈராக்கில் 50.8, உக்ரைனில் 43.9, ஆப்கானிஸ்தானில் 29.8, யெமனில் 15.8 பேர் பலியாகியுள்ளனர்.

வாரத்துக்குத் தேவையான உணவு உதவியில் 10 வீதமானது மாதத்திரமே கிடைக்கப்பெறும் நிலையில் காசாவுக்குள் உதவிகள் செல்வதை இஸ்ரேல் கட்டுப்படுத்துவது மேலும் அழிவை ஏற்படுத்தி வருவதாக ஒக்ஸ்பாம் சுட்டிக்காட்டியுள்ளது.